கொழுந்து

29

நவம்பர்
டிசம்பர்
ஜனவரி
2009 - 2010

இலக்கிய
முன்னோடிகள்...

மதுரா
மாமனிதர் விருது...
ரூபாய் ஒரு இலட்சம்

கொழுந்து

ஆசிரியர் - அந்தனி ஜீவா
57, மகிந்த பிளேஸ், கொழும்பு 06, இலங்கை.
0776612315, kolundu@gmail.com

2011இல் சர்வதேச எழுத்தாளர் மநாடு

2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருவரா காலம் கொழும்பில் நடைபெற உள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் ஒன்றுகூடலும் கொழும்பில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் காலைமுதல் மாலைவரை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பேராசான் கா.சிவத்தம்பி கலந்துகொண்டு அரிய ஆலோசனைகளை வழங்கினார். புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள் சமுதாய உணர்வுடன் தமது வாழ்வியல் அனுபவங்களை தங்கள் படைப்புக்களில் அவனது அனுபவம் வெளிப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

அனைத்துலக நாடுகளிலும் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் ஒன்றுகூடலாகவும், இலக்கிய வளர்ச்சியைப் பற்றிய ஆய்வரங்கமாகவும் இந்த மாநாடு அமையும்.

இந்த மாநாட்டில் எழுத்தாளர் முருகபூபதி மாநாடு சம்பந்தமான பன்னிரண்டு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தார். மாநாடு வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எழுத்தாளர்களின் கடமையாகும்.

விலை 50 ரூபாய்

ஓவியம்
கலாபூசணம் எஸ்.டி.சாமி
வடிவமைப்பு
அனுர்ஜன் - Design Lab

கவிதை — மட்டுவில் ஞானக்குமாரன்

நீங்களும் நாங்களும் .....!

உங்கள் நகரில்
எங்காவது இடிபாடுகளிருக்கலாம்
ஆனால்
இடிபாடுகளுக்குள்ளேயே
எங்கள் நகரம்
இருக்கிறது ....
உங்கள்
ஊருக்குள்ளே
எங்காவது சுடுகாடிருக்கலாம்
சுடுகாட்டுக்குள்ளேயே எங்களது
ஊர் இருக்கிறது...
உங்கள் பிள்ளைகள்
பள்ளிக்குப் போவதோ
கற்பதற்காக
எங்கள் பிள்ளைகள்
பள்ளிக்குப் போவதோ
கடலைக் கொட்டை விற்பதற்காக....!
நீங்களோ
ஆவின் பால் வாங்குகிறீர்கள்.
சிலைகள் தின்பதை
பார்ப்பதற்காக
நாங்களோ
கள்ளிப்பால் வாங்குகிறோம்
வறுமையை கொன்று
தீர்ப்பதற்காக ....
உங்கள் ஊர் காகங்கள் கூட
அதிஸ்டமானவை
ஏன்எனில்
விரதச் சோறிலே விருந்துண்கின்றன.
சாவுக்குக்கூட
இங்குள்ளவர் வாய்களிலே
அரிசி விழுவதில்லை ....?



SASICO TEX

Authorised Distributors for Original KIBS Products

Lucky Paradise Super Market,
No. 53/A, 12, Keyzer Street, Colombo 11, Sri Lanka.
Tel : 011 2432850, Fax 011 2471719.

Wholesale & Retail
Dealers in
Textiles

கலைமாமணி V.K.T. பாலன் – திருமதி T. சுசிலா
(தலைவர் / நிர்வாக இயக்குநர், மதுரா நிறுவனங்கள்)
தம்பதிகளின் மகள்
திருவளர் செல்வி
சரண்யாவையும்

டாக்டர். பி.பாபுமனோகரன் – திருமதி ஷீலா
(நிர்வாக இயக்குநர், சென்.ஜோசெப் இஞ்சினியரிங் கல்லூரி)
தம்பதிகளின் மகன்
திருவளர் செல்வன்
பி.ஜெய்குமார் கிறிஸ்துராஜனையும்

மனம் நிறைந்து
மகிழ்வுடன் வாழ்த்துகிறோம்.



இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர்
புரவலர் புத்தகப் பூங்கா
இல. 25, அவ்வல் சாவியா றோட், கொழும்பு – 14.

பேராசிரியர் ஆ.கார்த்திகேயன்

மலையகத் தமிழ்...

இலங்கை தேயிலைத் தோட்டங்களிலும், இறப்பர் தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக வெள்ளைக்காரர்களால் இந்தியாவிலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட தமிழ் மக்களை 'மலையக தமிழர்கள்' என்று கூறுவர். இக்குடியேற்றம்19ம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. மலையக தமிழ்கள் இந்தியா வம்சாவழியினர் என்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என்றும் அறியப்படுவதுண்டு. இவர்கள் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டிருந்தனால் கள்ளத்தோணி, கூலிகள், மலபாரிகள் என்றெல்லாம் நாமதேயங்கள் பெற்றன. அவர்கள் செய்யாத வேலைகள் இல்லை. படாத இன்னல்கள் இல்லை. காடு வெட்டி, கொட்டை போட்டு, கன்று நட்டு, கவ்வாத்து வெட்டி, முள்ளுக்குத்தி, காணு வெட்டி, கட்டடம் கட்டி, அப்பப்பா.........

மலை வேலை... ஸ்டோரு வேலை என்று இன்னும் எத்தனையோ வேலைகள் (உழைக்கப் பிறந்தவர்கள் பக்.195.196) மலையகத் தமிழர்களின் வரலாறு ஒரு சோக வரலாறேயாகும். ஆனால் அவர்கள் இலங்கைக்குச் சென்ற பின் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பெரும் மாற்றத்தை கண்டது. அரசியல் சமூக தளங்களிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்களுக்கு அவர்கள் கொண்டு சென்ற தமிழ்ொழியும் விதிவிலக்காக அமையவில்லை . அதுவும் சில பல மாற்றங்களுக்கு உட்பட்டது. ஒரு பக்கம் இலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் இலங்கை தமிழரின் தமிழ்மொழியும் இன்னொரு பக்கம் வெள்ளைக்காரர்கள் பயன்படுத்தும் ஆங்கில மொழியின் தாக்கம் மக்கள் செய்யும் தொழில் மலை பிரதேசங்களில் வாழ்கின்ற சூழல் இவையாவும் ஓரளவு மொழியையும் பாதித்தன. சூழலுக்கேற்றவாறு மொழியின் சொற்களஞ்சியத்திலும் இலக்கண அமைப்பிலும் மாற்றங்கள் தோன்றின. புதிய புதிய சொல் அமைப்புகள் தமிழகத்தில் நாம்

இலங்கைத் தமிழிலிருந்து சில சொற்கள் சிங்கள மொழியில் கலந்துள்ளன. அப்பா, அக்கா, அய்யா போன்ற உறவுப்பெயர்களும் சொதி, ஹொதி, இடியாப்பம், போன்ற உணவு பெயர்களும்

பயன்படுத்தும் தமிழை காட்டிலும் முற்றிலும் வித்தியாசமானவை. இந்த மலையக தமிழரின் மொழியை ஆராய்ந்து அதற்கு இலக்கணம் எழுதாததும் சொற்களை திரட்டி சிறப் பகராதிகள் வெளியிடாததும் பெருங்குறையே. இலங்கையில் நடைபெறும் ஆராய்ச்சிகள் குறித்து ஏதும் தெரியவில்லை.ஆனால் தமிழகத்தில் நாம் செய்ய வேண்டியது. அவசியம் இம்முயற்சி பொது தமிழின் தளத்தைப் பரப்பை விரிவாக்குவதற்கு ம் மொழித்திட்டமிடுவதற்கும் மிகவும் தேவையான ஒன்றாகும். மலையகத் தமிழின் சிறப்பு கூறுகளைஅறிய மலையகத்திலிருந்து வெளிவரும் இதழ்கள் நூல்கள் பலவேறு படைப்புகள் போன்றவற்றை தரவுகளாக கொள்ள முடியும். மலையகத்திலிருந்தும், கொழும்பிலிருந்தும் இன்றுவரை மலையகம் தொடர்பான இதழ்ப் பணியைத் தொடங்கிவைத்த பெருமை தஞ்சையைச் சார்ந்த பின்னர் இலங்கை சென்று மலையக தமிழைர்களின் விடுதலைக்காக போராடிய கோ.நடேசய்யர் அவர்களையே சாரும். இவ்விதழ்கள் தவிர தனியாக வெளிவந்துள்ள படைப்புகள் அடங்கிய இரண்டு தொகுப்பு நூல்கள் அண்மையில் நான்கு ஆண்டுகளுக்கு முன் வெளிவந்துள்ளன. துரை விஸ்வநாதன் அவர்கள் அவற்றை வெளியிட்டுள்ளார்கள். இக்கட்டுரையில் பயன்படுத்தப்படும் தரவுகள் உழைக்க பிறந்தவர்கள் என்ற சிறுகதை தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை. இனி மலையக தமிழின் சிறப்புக் கூறுகள் சிலவற்றை காண்போம்

மழையக தமிழில் வழக்கிலிருக்கும் சில சொற்கள் நமக்கு முற்றிலும் புதியவையாக உள்ளன. அச்சொற்கள் யாவும் அம்மக்கள் செய்யும் தொழிலோடு சம்பந்தப்பட்டவை. மீனவர்கள் பயன்படுத்தும் தமிழில் காற்றைக்குறிக்க பல்வேறு சொற்கள் இருக்கும். நமக்கு தெரியாத பல்வேறு மீன்களின் பெயர்கள் அவர்களுக்கு தெரிந்திருக்கும் எனென்றால் அவை அவர்களின் தொழிலோடும் தொடர்புடையவை. அவ்வாறே மலையக தமிழர்களின் மொழியில் அவர்களின் தொழில் பிரதேசம் தொடர்பாக சொற்கள் காண்பது வியறபிற்குறியதல்ல . கீழே சில சொற்கள் தரப்படுகின்றன.

பீலி, மையம், கவட்டு, மாத்து, வெட்டு, நிரை, போயா, மடுவம், சம்பல் கொந்தரப்பு, வழமை, பிரட்டு.

குசுனி என்ற சொல் சமையலறையை குறிக்கும். நேரத்தைச் சுட்ட தியாலம் என்ற சொல் பயன்படுத்தப்படும். படங்கு என்றால் தார்ப்பாய் காம்பராஎன்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. 'லைன் காம்பரா' என்றால் லைன் வீடுகளை குறிக்கும் நாம் 'அதிபர்' என்ற சொல்லை ஒரு பொருளில் பயன்படுத்துகிறோம் ஆனால் இச்சொல் அங்கே தலையை ஆசிரியரை குறிக்கும்.

தொகை சொற்கள் எல்லாம் மொழி களிலும் உள்ளவைதான். அவை பொது வாக இரண்டு தனி சொற்களை இணைத்து உருவாக்கப்படுவன. மலையகத் தமிழின் பயன்படுத்தப்படும் சில தொகைச் சொற் களும் நம் கவனத்தை ஈர்க்கின்றன. நாம் புகை வண்டியை புகையுடனும் வண்டியுட னும் இணைத்துக் காண்கிறோம்.

மலையாள மொழியில் அது 'தீவண்டி' ஆகிவிடுகிறது. ஆனால் மலையகத் தமி ழில் புகை வண்டி 'புகையிரத வண்டி'யாகி விடுகிறது. 'தேனீர்' தேத்தண்ணீராகிவிட்டது. கீழே சில தொகைச் சொற்கள்

கொட்டை போடுதல், கொழுந்து கிள்ளுதல், கவ்வாத்து வெட்டுதல், பேர் பதிஞ்சிக் கொள்ளுதல், முள்ளுக்குத்துதல், கொழுந்துக் கூடை, காணு வெட்டுதல், சித்தி பெருதல், மாத்துக்கொடுத்தல்.

மலையக தமிழ் இலக்கியங்களைப் படித்துப் புரிந்துக்கொள்ளவும் அவற்றின் நலம் பாராட்டவும் மேலே குறிப்பிட்டது போன்ற சொற்களுக்குப் பொருள் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசிய மாகிறது.

படுத்தப்பட்டுள்ளமையும் அறிய முடிகின் றது. இச்செய்திகளை மலையகம் வளர்த்த தமிழ் என்ற தம் நூலில் சாரல்

மணமகன் ஜெய்குமார் கிறிஸ்துராஜனையும்
மணமகள் சரண்யாவையும்

நீடுழி வாழ வாழ்த்துக்கள்

பூவராலசிங்கம் ஸ்ரீதர்சிங்

பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்....

இல. 340, 202, செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை.
தொ.பே. - 2422321, தொ.நகல் - 2337313
மின்னஞ்சல் - pbdho@sltnet.lk

தமிழ் மொழியில் இரட்டை கிளவி களுக்குக் குறைவில்லை இவற்றை ஒலிக் குறிப்பு ச் சொற்கள் என்று மொழியாலர்கள் கூறுவர். ஒரு மொழியில் பழங்காலத் தொட்டே இருக்கும் சொல்வகையில் இரட் டைக்கிளவிகளும் அடங்கும் மலையக தமி ழில் வழங்கும் சில இரட்டை கிளவிகள் நம் தமிழில் இல்லை கீழ்க்கண்ட எடுத்துக்காட் டுகளைக் கவனிப்போம்.

தொம்... தொம்.. என்று சத்தம் கேட்டுச் சனங்கள் ஓடிவந்து வாசலை மொய்க்க...

2. இவனுடையவளும் தொங்கு தொங் கென்று போனாள்.
3. ஒரு இரும்புத்துண்டை வைத்து டொங்.. டொங்... டொங்... என்று ஓசை எழுப்பு வான்.
4. வயிற்றுக்குள் சொப்பின் பேக் மடமடக் கும் சத்தம்....

தொம்....தொம் தொங்கு போன்ற இரட்டை கிளவிகள் நமக்குப் புதியவை.

மலையகத் தமிழுக்கும் தமிழகத்தில் வழங்கும் தமிழுக்கும் சில தொடர்களிலும் வேறுப்பாட்டைக் காணமுடிகிறது. எடுத்துக் காட்டு.

தமிழகத் தமிழ்

1. அ. வயதான காலத்தில்
2. அ.எவ்வளவு செலவு ஆனாலும் பரவா யில்லை
3. அ. ரிடையர்ட்டு ஆகிவிட்டார்

மலையகத் தமிழ்

1. ஆ.வயது போன காலத்தில்
2. ஆ.எவ்வளவு செலவு போனாலும் பரவா யில்லை
3. ஆ.பென்சனாகிவிட்டார்.

மேலும் சில எடுத்துக்காட்டுகள் இலக் கணத்தில் சுட்டிக் காட்டலாம் இவை பேச்சு தமிழிலேயே வருவன.

என்னுடைய எண்ட

உடைய ன்டை (குழந்தைகள் டை)

என்றால் எண்டா (பார்கிறதெண்டா)

இன்றைக்கு இண்டைக்கு

ஆங்கில சொற்களை தமிழ்படுத்திக் கொள்வதிலும் இரு கிளைமொழிகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. மலையக தமிழில் லாறியை லொறி என்றும் ஆப்பரேசனை ஒப்பரேசேன் என்றும் காப்பியை கோப்பி என்றும் உச்சரிக்கின்றனர் அதாவது ஆகா ரம் ஒகாரமாக உச்சரிக்கப்படுகின்றது. ட்யூ சன் என்ற சொல்லை ரியூசன் என்று குறிக் கின்றனர். ஸ்டெதஸ்கோப் என்பதை ரெரஸ் கோப் என்று எழுதுகின்றனர். இப்படி மலை யக தமிழ் பல வகையிலும் வேறுப்படு கின்றது. மேற்கண்ட சிறப்புக்கூறுகள் யாழ்ப்பாணத் தமிழுக்கு உரியவை இவற் றையெல்லாம் கண்டறிந்து விளக்க வேண்டி யது நம்கடமையாகும். கிளை மொழிகளில் உள்ள சொல் வளமும் இலக்கண

அமைப்பும் பொது மொழியை உருவாக்கப் பயன் படும் செம்மைப்படுத்த உதவும்.

மலையக தமிழில் பயன்படுத்தப்பட்ட சில சொற்கள் அவர்களோடு வாழ்ந்த வெள்ளைக்காரர்களின் ஆங்கிலத்திலும் கந்துள்ளன. மலையகத்தில் ஆங்கில பிரயோகம் பெற்ற தமிழ் வழக்குகள் பற்றிச் சாரல் நாடன் (1997.ப.95) குறிப்பிடப் பட்டுள்ளார். ஒரு வெள்ளைக்காரர் தாம் வெளியிட்ட இதழுக்கு முனியாண்டி என்ற தமிழ்ச்சொல்லைப் பெயராக வைத்திருக் கிறார்.

பெரியதுரை (periya dorai) சின்ன துரை (sinna dorai) போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் பயன்னடுத்தப்பட்டன. வில் லியம் என்பவர் 1889ல் எழுதிய ஒரு கட்டு ரைக்கு Autobiography of a peria dorai என்று தலைப்பிட்டுள்ளார் கணக்கு பிள்ளை என்ற சொல் cornicopoly என்றும் சோறு என்பது shor என்றும் ஆங்கில நூல்களில் தரப்பட்டுள்ளனவாம்.சில்லறை வேலை என்ற சொல்லை.Sillarai works என்றும் பச்சைத்துாள் என்ற சொல்லை wet dhool என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன. கம்பளி என்ற சொல் cumbly என்று பயன்படுத்தபட்டுள்ளது. தோட்டத்தில் தொழிளாலர்களுக்காக இருந்த கடையை Estate Kaday என்று ஆங்கிலத்தில் அழைத்தனர். இவ்வாறு சில மலையக தமிழ் சொற்கள் ஆங்கிலத்தில் பயன்படுத்தியுள்மை அறியமுடிகிறது இச்செய்திகளை மலையகம் வளர்த்த தமிழ் என்ற நூலில் சாரால் நாடன்குறிப்பிடுகிறார். இலங்கைத் தமிழிலிருந்து சில சொற்கள் சிங்கள் மொழியில் கலந்துள் ளன. அப்பா,அக்கா,அய்யா போன்ற உறவுப்பெயர்களும் சொதி, ஹொதி, இடியாப்பம், போன்ற உணவு பெயர்களும் சுத்தி, முட்டி தொட்டில் போன்ற பொருட் பெயர்களும், பாத்தி, வயல் (வெல்) போன்ற உழவுத்துறைப் பெயர்களும் ,கால் ,உதவி அடுக்கு போன்ற வினைகளும் சிங்கள மொழியில் வழங்குகின்றன. (சுசீந்திர ராஜா ,1999, பக், 153) ஆனால் இலங்கை தமி ழில் சிங்கள சொற்கள் ஏதுமில்லை. என் றும் சுசீந்திர ராஜா குறிப்பிடுகிறார். மலை யக தமிழிலிருந்தும் சிங்கள மொழியில் பல சொற்கள் கலந்திருக்கலாம். ஏனெனில் மலையகத் தமிழர்கள் இலங்கையின் மத் திய மலைப் பிரதேசங்களில் வாழ்கிறார்கள். முடிவாக நாம் ஒன்றைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை முடிக்கலாம். கேரளத் தமிழில் 'பொள்ளம்' என்றால் உப்புதல், வீங்குதல் என்று பொருள் பொள்ளுதல் என்ற சொல்லும் இதே பொருளில் வந்தது. இச்சொல்லின் வேர்ச் சொல் 'பொள்' என்ப தாகும் இச்சொல் திருக்குறளில் பயின்று வந்துள்ளது.

"பொள்ளென ஆங்கே புறம் வேரார் காலம்பார்த்து உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்."

என்பது அத்திருக்குறள் எனவே ஒரு காலத்தில் பரவலாக வழக்கிலிருந்து ஒரு சொல் ஒரு வட்டார அளவிற்கு சுருங்கி வழங் கப்படுவதைக் காணமுடிகிறது. இந்நிலை யில் வட்டார வழக்குகளை ஆய்வு செய்து பொதுத்தழிழை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

துணை நூல்கள்
1.அந்தனி ஜீவா -
காந்தி நடேசய்யர்
2.சுசீந்திர ராஜா
தமிழ் மொழியியற் சிந்தனைகள்
3.சாரல் நாடன்
மலையகம் வளர்த்த தமிழ்
4. துரை விஸ்வநாதன்
உழைக்க பிறந்தவர்கள்

இரா.சடகோபன்

கோப்பிக் காலத்திலே....

"டின்னில் அடைத்தப் புழுக்களைப்போல் கப்பலில் வந்த தொழிலாளர்கள்"

- ஹென்றி ஒல்கொட்

1840களைத் தொடர்ந்து இலங்கை யின் கோப்பிப் பெருந்தோட்டச் செய்கை பரப்பான கட்டத்தையடைந்தது கோப் பிக்கு நல்ல விலை கிடைத்தப்போதும் அறுவடை செய்வதற்கு தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டதால் தென்னிந்தி யாவில் இருந்து வருகை தரும் தொழிலா ளரின் தொகையை உத்தரவாதப்படுத்த வேண்டியிருந்தது.

வரும் தொழிலாளர்கள் அறுவடை முடிந்ததும் திரும்பிப் போய் விடுவதால் அவர்களை மீண்டும் வரச் செய்ய செலவு கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இத னால் கோப்பித் தோட்ட உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு நெருங்குதல் கொடுத் தனர்.

அதன் காரணமாக அரசாங்கம் தொழி லாளர்கள் வந்து போவதை உத்தரவாதப் படுத்துவதற்காக இலவச கப்பற் போக்கு வரத்து ஏற்பாடு செய்தது. கப்பல் சேவை களை ஏற்படுத்தியது. எனினும் இந்த கப்பல் சேவைகளை தொழிலாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்தன.

இலங்கையின் புகழ்பெற்ற அமெரிகா மதவாதியான கர்னல் ஹென்றி ஸ்டில் ஒல் கோட் அவர்களின் கூற்றுப்படி கோப்பித் தொழிலாளர்கள் இலங்கைக்கு கப்பலில் அழைத்துவரப்பட்டபோது அவர்களின் டின் களில் அடைக்கப்பட்ட புழுக்கள் போன்ற நிலையில் இருந்தனர் என்று கூறியுள் ளார். கடலில் படகுகளுக்கு பல விபத்துக்கள் நடக்கின்றன. என்றும் நூற்றுக்கணக்கான வர்கள் இறந்தும் காணாமலும் போயுள்ள னர். என்றும் அவர் (1843) குறிப்பிட்டுள் ளார்.

1840களில் மெட்ராஸ் மாநிலத்தில் மிகத் தீவிரமான பஞ்சம் தலைவிரித் தாடியது. ஆயிரக்கணக்கான மக்கள் தமிழ் நாட்டின் கரையோரப்பிரதேசங்களின் வந்து குவிந்த தமது கையிலிருந்து இறுதிக் காசையும் செலவழித்து எப்படியாவது கண்

டிச்சீமைக்கு சென்று விட வேண்டுமென்று தவியாய் தவித்தனர் நிலைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட படகு முதலாளிகள் அதிக கட்டணத்தை அறவிட்ட துடன் அளவுக்கதிகமான தொகையினரை படகுகளில் திணித்துக்கொண்டும் வந்தனர். இதனால் நடுக்கடலில் பல அழிவுகள் ஏற் பட்டன.இந்த நிலையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசாங்கம் இலவச படகு சேவையை ஆரம்பித்தது. எனினும் இச் சேவை நீண்ட காலமாக நீடிக்கவில்லை. இச்சேவை 1844ஆம் ஆண்டு நிறுத்தப் பட்டதென வரலாற்று ஆய்வாளர் பேரா சிரியர் பேர்ட்ம் பஸ்தியாம்பிள்ளை தெரிவிக் கின்றார்.

அதனை தொடர்ந்து தனியார் படகுச் சேவைகள் மேலும் அதிகரித்தன. அன் றைய பெறுமதியில் 6 பென்சில் இருந்து 9 பென்ஸ் வரை தலைக்கு கட்டணம் அறவிடப் பட்டது. இது இந்திய ரூபாவில் 12 அளவாக இருந்தது. தொழிலாளர்கள் தமது கிராமங் களில் இருந்து தொகையாக தமிழக படகு துறைகளில் ஒன்றில் இறக்கப்பட்டனர்.

ஏற்கனவே பல படகுகள் கடலில் மூழ்கி நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஒவ் வொரு விபத்திலும் பலியாகி இருந்த போதும் 1853ஆம் ஆண்டு கொழும்பு என்ற பெயர் தாங்கிய கப்பல் கவிழ்ந்து 100பேர் வரை இறந்து போனமையே முதலாவது கடல் விபத்தாக பத்திரிகைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.கொழும்பு துறை முகத்தில் இருந்து 150தொழிலாளர்களு டன் புறப்பட்ட இச்சறு கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கழிக்காற்றில் அகப்பட்டு கவிழ்ந்ததென்றும்.

இதில் 100பேர் வரை இறந்திருக்கலாம் என்றும் 'த ஒப்சவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இந்த கப்பலில் சென்ற வர்கள் போப்பி தோட்டங்களில் கொலரா நோய் தீவிரமாக பரவியமை காரணமாக அதில் இருந்து தப்பிப்பிழைப்பதற்காகச் செறவர்கள்.

இந்த விபத்தை தொடர்ந்து இலங்கை யிலும் இங்கிலாந்திலும் அரச உயர் மட் டங்களில் சலசலப்பு ஏற்பட்டது. தொழி லாளர்களி பாதுகாப்பு எத்தனை பேரை ஒரு கப்பலில் ஏற்றலாம் என்பது தொடர்பில் இங்கிலாந்திலி ருந்த ராணியின் சட்ட நிபுணருடன் (queen advocate) ஆலோ சித்து சில சட்டங் கள் அறிமுகப் படுத்தப் பட்டன என ஆய்வாளர் கே.எம்.டி சில்வா குறிப்பிட்டுள்ளார். இதனால் தொழிலாள ரின் சுதந்திரமான வருகையின் தடைகள் ஏற்பட்டன. தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே 1854 முதல் செயற்பட்டு வந்த இலங்கை தோட்டத்துரைமார் சங் கத்தினர் (planters Association) அப்போது ஆளுனராக இருந்த அன்டர்சன் (Anderson) அவர்களிடம் தொழிலாளரை இறக்கு மதி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் அவரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இரா.சடகோபன்

அன்டர்சனுக்கு பின் இலங்கையின் ஆளுனராகப் பதவியேற்று வந்த சேர்.ஹென்றி வார்ட் (1855-18, (Sir hendry Ward) கோப்பி பயிர்ச் செய்கையின் வளர்ச் சியில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். அவர் தொழிலாளிகளின் கிடைப்புத்

தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்காக கொழும்பிலும் லண்டனிலும் இருந்த ஆர்வ முள்ள வர்த்தக பிரமுகர்களை இணைத்துக் கொண்டு கப்பல் போக்குவரத்து கட்டமைப் பொன்றை ஏற்படுத்தினார். அதன் பிரகாரம் 1856மஆம் ஆண்டு சிலோன் கூலிப் போக்குவரத்து நீராவிக்கப்பல் கம்பனி (ceylon cooly transport and steam navigation company) உருவானது. இதற்கான முதலீடான ஸ்டர்லின் பவுண் 25,000ஐப் பெற்றுக்கொள்ள பத்து பவுண் பங்குச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டபோது அதற்கு கணிசமான வரவேற்பு கிடைத் தது.1857ஆம் ஆண்டு இலங்கையின் கோப்பி வர்த்தகத்தின் வளர்ச்சி கருதியும், பொது வேளைகளில் ஈடுப்படுத்தவும் என இந்திய தொழிலாளரின் வருகை மேலும் அதிகரிக்க செய்யதான் 10,000 பவுண் வட் டியில்லாக்க கடனை கூலிப்போக்கு வரத்துக் கம்பனிக்கு வழங்க தீர்மானித்திருப்பதாக ஆள்பதி வார்ட் சட்ட சபையில் அறிவித்தார். வருடாந்தம் 50,000 முதல் 100,000 கூலி களை இலங்கைக்கு அழைத்துவர உத்தர வாதமளிப்பதாக தோட்டத் துரைமார் சங்கத் திடமும் தெரிவித்தார்.

எனினும் அவரது திட்டங்கள் தோல்வி யிலேயே போய் முடிந்தன. அவர் எதிர்பார்த் தபடி இலங்கை வர்த்தகர்களும் தோட்ட துரைமார் சங்கமும் தங்கள் பங்கு ஒத் துழைப்பை வழங்க தவறினர். 1858ஆம் ஆண்டு 96,662 ஆக இருந்த தொழிலா ளரின் வரவு 1859ஆம் 40,104 ஆகக் குறைந்தது. இதற்கு பல காரணிகள் பங் களிப்புச் செய்தன.

தொழிலாளர்களை ஏற்றி வருவதற் கென பவுண் 5,000 செலவழித்து கொள் வனவு செய்யப்பட்டிருந்த மான்செஸ்டர் (manchester) என்ற கப்பல் ஒன்றுக்கும் உத வாததென பின்னே ஹென்றி வார்ட்டுக்கு தெரிந்தது.அதனை பழுதுப்பார்ப்பதாயின் மேலும் 7,500 பவுண்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டது. எனவே அதனை உடைத்து காயலாங்கடைக்குப் போட்டு விடும்படி காலனித்துவ செயலாளருக்கு வார்ட் விதந்துரை செய்தார்.

ஹென்றி வார்ட் என்னதான் முயற் சித்தாலும் காரியங்கள் அவரது கையை மீறியே நடைபெற்றன. தொழிலாளர்கள் ஸ்டீமர் படகுகளுக்குப் பதில் தனியார் படகு களில் பிரயாணிப்பதையே அதிகம் விரும் பினர். அரசாங்க கெடுபிடிகளே அதற்கு காரணம். ஆதலால் முழுப் போக்குவரத் தையும் ஒழுங்குபடுத்த இலங்கையிலும், இந்தியாவிலும் பல சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. அதன் பிரகாரம் பின்வரும் ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டன.

1. விதிக்கப்பட்டுள்ள அளவுக்கு மேல் படகு களில் கூலிகளை ஏற்றமுடியாது. அவ் விதம் ஏற்றினால் தலைக்கு 2 பவுண் கள் அபராதம் விதிக்கப்பட்டது.
2. 4 தொன்களுக்கு 1 பிராணி என்ற விகி தாசாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
3. ஒரு பிரயாணிக்கு 6 அடி பரப்பு வழங் கப்பட வேண்டும் இரண்டு டெக்குகளுக் கும் (decks) இடையில் அடி இடைவெளி இருக்க வேண்டும்.
4. போதுமான உணவும், குடிநீரும் இருக்க வேண்டும்.
5. குறித்துரைக்கப்பட்ட படகு துறைகளி லேயே தொழிலாளர்கள் இறக்க வேண் டும்.

எனினும் இவற்றாலெல்லாம் முறை கேடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆள்பறி ஹென்றி வார்ட்டை அடுத்து சேர் சார்ள்ஸ் மெக்கார்த்தி (1860-1863 sir

charls meccarthy) பதவி பெற்று வந்தார். அவர் வார்ட்டின் நடவடிக்கைகளை செலவு மிக்கது. என விமர்சித்து பல சட்டங்களையும் திருத்தினார்.ஏற்படுத்தப்பட்டிருந்த குடிவரவு ொதழிலாளர் ஆணையாளர் சபையையும் (board of immigration of labour commi-ssioners) கலைத்து விட்டார்.

மெக்கார்த்தியின் காலத்தில் ஷாரா ஆர்மிடேஜ் (sarah armitage) ஜெரால்டினா (geraldina) ஆதி லெட்சுமி (Audy Letchumiy) ஆகிய கப்பல்கள் தொழிலாளர்களை ஏற்றி வந்தன. மெக்கார்த்திதானே நேரடியாக மன்னார் இறங்குதுறைக்குச் சென்று அங்கு தொழிலாளரின் ஆரோக்கியம் பற்றி அவதானித்தார். அரசாங்கத்தின் குறைந்த கட்டண கப்பற் சேவையால் தனியார் படகுச் சேவை செயழிழந்ததாக அவர் சட்ட சபையில் தெரிவித்தார்.

எனினும் கப்பற் சேவைகளில் மீண்டும் பிரச்சனை ஏற்பட்டது. 1864ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒருநாள் மன்னார் வங் காலையில் இருந்து 150 தொன் பாரத்துடன் தொழிலாளரை ஏற்றிச் சென்ற ஆடி லெட்சுமி என்ற கப்பல் நடுக்கடலில் விபத்தில் சிக்கி தூக்கியெறியப்பட்டது. இதில் பயணித்த 120 தொழிலாளர்களின் 7 தொழிலாளர்களும் கப்பல் சேவையாளர் 14 பேரும் மட்டுமே தப்பிப் பிழைத்தனரென டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இந்நிகழ்வு பற்றி அப்பத்திரிகை பின்வருமாறு தெரிவித்திருந்தது.

பெப்ரவரி 5ஆம் திகதி காலை 7 மணி அளவில் கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருக்கும் போது கப்பல் ஊழியர் தலைவன் கப்பலுக்கு வடக்கிழக்கு பக்கமாக கடல் நீர் வானம் வரை எழுந்து வேகமாக கழன்று நகர்வதைக் கவனித்தான். எனினும் கப்பல் வடமேற்கு திசையில் சென்று கொண்டிருந்ததால் அவன் அது தொடர்பில் அதிக அக்கறை கொள்ளவில்லை. ஆனால், அந்த சுழலும் நீர்த்தாரை கப்பலை நோக்கி வந்தபோது அவர்களால் கப்பலை அப்பால் நகர்த்திச் செல்ல முடியவில்லை. காற்றுடன் வேகமாக கழன்ற நீர்த்தாரை நீரிலிருந்து சுமார் மூன்றடிக்கு மேல் கப்பலை தூக்கி எறிந்தது. அநேகமாக தொழிலாளர்கள் கப்பலின் அடித்தளத்திலேயே இருந்தார்கள். கப்பல் உடைந்து சிதறியபோது அதன் துண்டுகளை பிடித்துக் கொண்டு மிதந்தவர்களை அவ்வழியால் மற்றுமொரு கப்பலில் இருந்தவர்கள் பி.ப.2 மணியளவில் காப்பாற்றினர்.

இவ்விபத்து தொடர்பில் விசாரனை ஒன்று இடம்பெற்றபோதும் யார் மீதும் குற்றம் சுமத்தப்படவில்லை. எனினும் இது கவனக்குறைவால் நிகழ்ந்தது என பின்னர் விமர்சிக்கப்பட்டது.

அதே ஆண்டு சாரா ஆர்மிப்பேஜ் என்ற கப்பலும் சிலாபத்துக்கருகில் பேரலையில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 60 கூலித் தொழிலாளர் உயிரிழந்தனர் என்று செய்தி வெளிவந்தது. என்ற போதும் பின்னர் இரண்டு உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் அரசாங்கக் கப்பல்கள் மூழ்கிய போது செய்திகள் வந்தபோதும் பல தனியார் படகுகள் மூழ்கி நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தபோது அந்நிகழ்வுகள் யாரது கண்ணிலும் படாமல் போயின என்று ஆள்பதி ஹென்றி வார்டின் சுய சரிதத்தை எழுதிய எஸ். வி.பாலசிங்கம் தெரிவித்திருப்பதாக ஆய்வாளர் டெனோவன் மொல்ரிச் தனது bitter berry bondage என்ற நூலில் தெரிவித் துள்ளார்.

■ தி.ரா.கோபாலன்

இலங்கையின் பயிர் செய்கை வர்த்தகத்துக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது போக்கு வரத்து நிலையைதான் 1850களில் கோப்பி மூடைகள் மலைநாட்டிலிருந்து கண்டிக்கு எடுத்துச்சென்று அங்கிருந்து கொழும்புக்கும், தென்பகுதித் தோட்டங்களிலிருந்து காலிக்கும் எடுத்துசெல்லப்பட்டன.

அரசாங்கத்தின் திறைசேரி அநேகமாக கோப்பி வர்த்தகத்திலேயே தங்கியிருந்த தால் சாலை அமைப்பினை பெரும் பகுதியின் எதிர்பார்ப்புக்கள் தோட்டங்களை பார்த்தவண்ணம்இருந்நதன.

கோப்பிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் மாட்டு வண்டிகள் நீண்ட தூரத்தை வேகமாக கலந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது எனினும் அதனால் பல தொல்லைகளும் தாமதங்களும் ஏற்படவே செய்தன.

'பெட்டிசன்' முறை பிரபல்யம் அடைந்

கவர்னர் பானஸ்துரையியின் காலப் பகுதியிலே கொழும்புக்கும் கண்டிக்குமான நெடுஞ்சாலையில் செப்பனிடப்பட்டது. வேறு சாலைகளும் போடப்பட்டன.

திருந்த அக்கால பகுதியில் தோட்டச் சொந்தகாரர்கள் விழிப்படைந்தனர். தம்முடைய வர்த்தகத்தின் உந்து நிலைக்கு ரயில்வே போக்குவரத்து வேண்டுமென லண்டன்

அரச கவுன்சீலுக்குப் பெட்டிஷன் அனுப்ப தொடங்கினர்.

அதை நீண்ட காலத்துக்கு ஒரு போராட்டமாக நடத்தினர் அப்போதைய இலங்கையின். 'கவர்னர்' அரசுக்கு எதிராக நடத்திய பெட்டிஷன் போராட்டம் நமது மலையக போராட்டங்களின் முன்பக்க முடிச்சு என கூறலாம்.

அவர்களுடைய பத்துவருட போராட்டத்துக்கு கொழும்பு ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியர் டாக்கடர் எலியட் பெருந்துணையாயிருந்தார். அந்த பெட்டிஸன் போராட்டத்துக்கு தலையை தாங்கியவரும் அவரே இந்த நாட்டில் ரயில்வே போக்குவரத்தை ஆரம்பித்தால்தான் தோட்டங்களை நடத்துவோம் என்றும் குரல் கொடுத்தார்கள் அப்போதைய இலங்கை அரசின் திறைசேரியும் கோப்பியை நம்பியிருந்ததால் இது மேலும் சக்தி வாய்ந்த போராட்டமாகவும் இருந்தது.

இதன் காரணமாக அரசு ரயில்வே கம்பனியை 1850ஆம் ஆண்டளவில் அமைந்தது. தொடர்ந்து கோப்பி மரங்களை தாக்கிய இலை நோயின் காரணமாக உற்பத்தி குறைந்த திறைசேரி நிலையை திண்டாட்டத்துக்குள்ளாகியது. அதன் காரணமாக ரயில்வே திட்'டம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும் தோட்டச் சொந்தக்காரர்களின் போராட்டங்களும் தொடர்ந்தன. இந்த போக்குவரத்துப் பிரச்சனைகள் லண்டன் காமன்ஸ் சபையிலும் அவ்வப்போது பேசப்பட்டன. 1856ம் ஆண்டு அரசுக்கும் ஒரு தனியார் கம்பனிக்குமிடையே ரயில் பாதை போடும் திட்டத்துக்கான ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

முதலில் கொழும்புக்கும் கண்டிக்குமான பாதை வேலைகள் 1858ம் ஆண்டு ஒரு தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அரசுக்கு இந்த வேலைதிட்டங்களில் திருப்தி ஏற்படவில்லை.

அதன் காரணமாக இந்த கம்பனியை அரசு சுவீகாரம் செய்தது. லண்டனிலிருந்து திரு பெவில் என்பவரை வரவழைத்தார்கள். இங்கிலாந்தின் தலைசிறந்த பொறியியலாளர்களில் ஒருவர் திரு பெவீல்.

திரு பெவில் கொழும்புக்கும் கண்டிக்குமான முதலாவது பிரதான ரயில் பாதையின் திட்டத்தை திறம்பட வகுத்தவராவார். அவருடைய கடினமான உழைப்புடன் (சிந்தனை உழைப்பு) தென்னிந்திய தமிழர்களின். உறுதி வாய்ந்த உழைப்பும் உள்ளூர் சிங்கள தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் பிரதான ரயில் பாதையொன்றை இந்நாட்டில் அமைவதற்கு உதவியாக இருந்தன.

இந்நாட்டு அபிவிருத்தி யுகத்தின் முன்னோடி திட்டங்களின் ஆரோக்கியமான குழந்தைதான் இலங்கை ரயில்வே. இக்குழந்தையை பெற்றெடுக்க தொழிலாளர்கள் சிந்திய உதிரதுளிகள் ஏராளம்.

பெரும் பாறைகளை டைனமைட் வைத்து உடைத்து செதுக்கிப் பாலங்களையும் சுரங்கங்களையும் பாதை நெடுக நிர்ணயிப்பதில் தொழிலாளரின் உரம் வாய்ந்த தோள் பலம் இருந்தது.

வாழ்க்கையை அனுபவித்து வாழ்வதை எள்ளளவும் நினையாமல் நெஞ்சை பிடித்து மூச்சை நிறுத்தி ரயில்வே திட்டத்திற்காக போராடியவர்கள் தொழிலாளர்கள்.

ஆங்கில கட்டுப்பாடுகள் என்ற இரும்பு வலைக்குள் வெயிலிலும், காற்று, மழையிலும் காடுகளுக்கூடாக அபிவிருத்தி போர்

[தொடர்ச்சி 16-ம் பக்கம்]

இலங்கை நெய்னார்

இலங்கை இந்திய கலை உலகில் ஒரு பாலமாக வாழ்ந்து அமரரானவர்
அகில இலங்கை எம்.ஜி.ஆர். மன்ற நிறுவனர்
அண்ணா தி.மு.க. மாநிலச் செயலாளர்

இந்தப் பக்கத்தை வழங்கியவர்
இம்ரான் நெய்னார்
e-mail : nainarimran@live.com, Mob : 0772629292

செய்த நமது முன்னோடிகள் அந்த செயல் திறன்களினால் கொழும்புக்கும்' கண்டிக்கு மான ரயில் பாதை 1863இல் ஆரம்பமாகி 1867அக்டோபர் 1ஆம் திகதி பூர்த்தியாகிப் போக்குவரத்துக்குத் துணைபுரிந்தவர்களா வர்.

ஆக 1867இல்கொழும்பிலிருந்து கண் டிக்கும் இணைப்புப் பாதைகள் 1874இல் நாவலப்பிட்டிக்கும் 1885இல் நானுஓயாவிற்கும் 1894இல் பண்டாரவளைக்கும், களுத்துறைக்கு 1879இல் காலிக் கும் 1894இல் மாத்தறைக்கும் 1894 இலும் போடப்பட்டன.

பதுளைக்கான ரயில் பாதை 1924இல் தான் போடப்பட்டது. இலங்கையின் நடுப் பகுதியில் ஊடுறத்துச் செல்லும் வகையில் கொழும்புக்கும் மட்டக்களப்புக்கு மான பாதை 1928இல் போடப்பட் டன. அவிசாவலைக்கு 1902இலும் இரத் தினபுரிக்கு 1912 இலும் யாழ்ப் பாணத்துக்கு 1905 இலும் போடப்பட்டன.

குறிப்பாக இந்திய தோட்டத்தொழிலா ளர்களின் மிக குறைந்த கூலி முறையினால் எதிர்பார்க்கப்பட்ட செலவிலிருந்து சரி பாதி அளவிலே கொழும்பிற்கும் கண்டிக்குமான முதலாவது பாதை அமைப்பு பூர்த்தியான தென்பதை கூறியே ஆகவேண்டும்.

இலங்கை தேயிலை வர்த்தக யந்திரத் தின் முன்னணி சாதனமாக இலங்கை ரயில்வே நீண்டகாலமாக இயங்கியுள்ளது. கோப்பியின் இடத்தை நாசுக்கான முறை யில் தேயிலை பிடித்துக்கொண்டதால் இலங்கை ரயில்வேயின் நீண்டகால பய ணிகள் என்ற முதல் தர கௌரவத்தை தேயி லைப் பெட்டிகளே பிடித்துக்கொண்டன.

தேயிலை வர்த்தகம் இந்நாட்டில் நிலைத்திருப்பதின் நிலைத்திருப்பதின் காரணங்களின் ஒரு பகுதி ரயில்வே போக்கு வரத்தையே சாரும் இந்த பிரமாண்டமான போக்குவரத்து அமைப்பு யதேச்சையாக வந்து விடவில்லை.

பெட்டிசன் போராட்டம், கடின உழைப்பு, பரந்த தியாகம், ரயில்வே அமைப்பு அன்று போராடியவர்களும் போராட்டங்களை எதிர் கொண்டவர்களும். ஒரே இனத்தை சேர்ந்த வர்கள் என்பதால் எல்லாமே இனிதாக நிறைவேறியது.

ஆகவே போராடுபவர்களுக்கு பின் னால் நீதியும், நேர்மையும் சரியான மனித பண்பும், சரியான இலக்கும் எதிர் நோக்குப வர் உள்ளங்களில் அனுதாப உணர்வும் நேசப்பார்வையும் உண்டானால் விளைவு விவரிக்க முடியாத நன்மை பெறும்.

ரயில்வே அமைப்புகளின் நூறு வருட காலத்தை கடந்து நாம் அந்த மனிதர்களை கற்பனையாக நிமிர்ந்து பார்ப்பதை போல அடுத்த நூறு வருடங்களுக்கு பிறகு நம்மை நிமிர்ந்து பார்க்கும் நிலைக்கு நாம் நம்மை இட்டுச் செல்வோம்.

இலங்கையில் ஜெயகாந்தன்

எழுத்துலக ஜாம்பவான் ஜெயகாந்தன் படைப்புகள் இலங்கை வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் நன்கு அறிமுகன்றது. "கொழுந்து" சஞ்சிகை ஜெயகாந்தனுக்கு ஒரு சிறப்பிதழையும் வெளியிட்டது. இலங்கை சாகித்திய அகடமி 2008ம் ஆண்டு சாகித்திய விழாவின் பொழுது சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனைப்பற்றி "தமிழ் சிறு கதையின் முன்னோடி புதுமை பித்தன்" என்ற மகுடத்தில் புதுமைபித்தன் கதைகளை சிங்களத்தில் வெளியிட்டது..அதே போல் 2009-ஆம் ஆண்டில் ஜெயகாந்தனின்



சிறுகதைகளை சிங்களத்தில் வெளியிட்டுள்ளது. இந்த இரண்டு நூல்களை சிங்க மொழிக்கு வழங்கியவர் கவிஞர் சு.முரளிதரன். இலங்கையின் பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமான கொடகே நிறுவனம் "இல்லாதவர்கள்" என்ற நாவலை சிங்கள மொழியில் வெளியிட்டுள்ளது. இலங்கையிலும் தமிழ், சிங்கள எழுத்தாளர்கள் ஜெயகாந்தனின் வருகையை எதிர்ப்பார்க்கின்றனர். இலங்கை எழுத்தாள தோழர்களை சந்திக்கும் பொழுது எல்லாம்...வருவேன் ...ஒரு நாள் நிச்சயம் ஒரு நாள் இலங்கைக்கு வருவேன் "என்று கூறும் எழுத்து வேந்தர் ஜெயகாந்தன் 2011ல் கொழும்பில் நடைபெற உள்ள உலக தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு வருகை தரலாம். என்று நம்பிக்கையுடன் எதிர்ப்பார்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்



இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடிகள் இருவர் ஆவர் மகாகவி பாரதி மற்றவர் சிறுகதை மன்னன். புதுமைப்பித்தன் இருவரையும் நினைவு கூறவேண்டியது தமிழில் எழுதும் ஒவ்வொருவரின் கடமையாகும்.மலையக புனைக்கதை இலக்கியத்தின் முதல்வர் புதுமை பித்தனாகும்.இலங்கைக்கு வராமலேயே "துன்பகேணி" என்ற அற்புத இலக்கிய படைப்பை தந்தவர்.

அடுத்த அட்டையில் இடம் பெற்றிருப்பவர் கலைமாமனி வி.கே.டி பாலன். தமிழக தலைநகரான சென்னையில் தொழில் அதிபராக விளங்கும் இவர் இலங்கையில் வாழ்ந்த நாட்களில் கலைத்துறையில் அதிக ஈடுபாடுக் கொண்டவர் நாடகங்களில் நடித்துள்ளார். இலங்கை இற்திய கூட்டுத்தயாரிப்பானநடிகர் முத்துராமன் முக்கிய பாத்திரத்திலர் நடித்த நங்கூரம் திரைப்படத்தில் நடித்துள்ளார். அந்தனி ஜீவா எழுதி, நெறிப்படுத்திய சாத்தான் வேதம் ஓதுகிறது. என்ற நாடகத்தை தயாரித்தவர். இவர் மனித நேய சேவைக்காக ஆண்டு தோறும் ரூபாய் ஒரு லட்சம் மதுரா மாமனிதர் விருது வழங்குகிறார். திரு.எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களது தன்னலமற்ற மனிநேய சேவைக்காக கலைமாமணி வி.கே.ரி.பாலன் அவர்கள் 22.10.2009அன்று மதுரா மாமனிதர் விருதை வழங்கினார்கள்.

நிகழ்ச்சிக்கு திருநெல்வேலி மேயர் மேதகு ஏ.எல். சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்கள்.

UNI Lanka's

#32 , St Anthony's Mawatha, Colombo 13
Sri Lanka. 0114 614438, 0115 5665214
e-mail : balendra_co13@yahoo.com

யுனிலங்காஸ் வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டி தயாரிப்பாளர்கள்

* Graphics Designing
* Sinhala, Tamil & English
* Computer Type Setting
* Print & Production
* Offset Printing
* Screen Printing
* Education Publishers



உலகத் தமிழ் படைப்பாளிகளை இணைக்கும் இணையத்தளம்

உலகில் வாழும் தமிழ் படைப்பாளி களை இணைக்கும் வகையில் இணையத் தளம் ஒன்றினை கனடாவில் இருக்கும் எழுத்தாளர் அகில் ஆரம்பித்துள்ளார். இவ் இணையத் தளத்தில் உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழ் படைப்புக்களின் பெயர் விபரங்கள் அவர்களின் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. தவிர இலக்கிய நிகழ்வு களின் காணொளிகள் எழுத் தளார்களின் படைப்புகள் மற்றும் பதிப்பகங் களின் விபரங்கள் என பல விடயங்களை www.tamilauthors.com என்ற இவ் இணை யத்தளத்தில் பார்வையிடலாம்.

நீங்களும் ஒரு தமிழ் படைப்பாளியாக இருந்தால் உங்களையும் இவ் இணையத் தளத்தில் பதிவு செய்துகொள்ள முடியும். உங்கள் பெயர், புனைப் பெயர், பிறந்த இடம், வதிவிடம், படைப்பாற்றல், பெற்ற விருதுகள் போன்ற தகவல்களுடன் உங்கள் புகைப்படம் ஒன்றையும் www.editore@tamilauthors.com எனும் மின்னஞ்சல் முக வரி ஊடாக அனுப்பி உங்கள் விபரங்களையும் இத்தளத்தில் பதிவு செய்துகொள்ள முடியும். உலக தமிழ் படைப்பாளர்களை ஒன்றிணைக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இவ் இணையத்தளம் எழுத்தாளர் கள் மாணவர்கள் உட்பட பலருக்கும் பயனுள்ளதாக அமையும் என எழுத்தாளர் அகில் தெரிவித்தார்.

நூலகர் என்.செல்வராஜா இலங்கை விஜயம்

நூல் தேட்டம் தொகுப்பாசிரியர், நூலகர் என்.செல்வராஜா லண்டனில் இருந்து மார்ச் 21ஆம் திகதி இலங்கை வருகிறார். இவர் மூன்றுவார காலம் இலங்கையில் இருப்பார். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு நேரடியாகச் செல்லவுள்ளார். இங்கு இருக்கும் நாட்களில் எழுத்தாளர் களையும், ஊடகவியலாளர்களையும் சந்திக்க விரும்புகிறார். மேலதிக தகவல்களுக்கு : கொழுந்து சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளவும்.

கொழுந்து வளர வாழ்த்துக்கள்



சமூகஜோதி

Lion J.P.Jeyaram J.P.

118/7, S.R. Saravanamuttu Mw, (Wolfendhal Street)

Colombo 13, Sri Lanka.

Jeyaram Brothers

Dealers in Jute Gunny Bags, Tea Chest, Twine & Polythene

Importer of all type of Jute Items,

Peper, Indian's, Chainese, Japane's Cellophane

Tel : 2445615, 2348430, 2345099, 2345142

Fax: 2330164, e-mail : jayaramb@sltnet.lk

இலங்கைக்கு வருகை தந்த நடேசய்யர் மலைகள் சூழ்ந்த தேயிலைத் தோட்டங்களில் வாழ்கின்ற இந்தியத் தொழிலாளர்களின் நிலையை நேரில் கண்டறிய விரும்பினார்.

தேசபக்தர் கோ.நடேசய்யர் முதல்... தொழிற்சங்கவாதி தொண்டமான்வரை...

அந்தக் கால கட்டங்களில் தேயிலை ரப்பர் தோட்டங்களில் வெள்ளைத்துரை மார்களின் ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தோட்டங்களுக்கு உள்ளே வெளியார் யாரும் செல்ல முடியாத. சூழ்நிலை அப்படி செல்வது சட்டப்படி குற்றமாகும்.

புடவை வியாபாரிகள் மாத்திரம் செல்வது வழக்கமாகும். நடேசய்யர் புடவை வியாபரியாக மாறினார். வியாபாரிகளுடன் சேர்ந்து தோட்டங்களுக்குச் சென்றார். அவர்களின் துயரம் மிகுந்த வாழ்க்கையை நேரில் கண்டறிந்தார்.

இந்தியா திரும்பியதும் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு வெளியிட்டார். தஞ்சாவூரில் உள்ள காங்கிரஸ் கமிட்டியிடம் தனது அச்சிட்ட பிரசுரத்தையும் விளக்கமான அறிக்கையாக சமர்பித்தார்.

இந்த பாவப்பட்ட மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என தீர்மானித்தார்.

மீண்டும் 1920 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தார். இலங்கை தேசிய காங்கிரஸ் நிர்வாகக்குழு உறுப்பினராக

இருந்த ஈ.வி.ரட்ணம், எம்.ஏ.அருளானந்தம் என்ற இருவரையும் வெளியீட்டாளராகக் கொண்டு 'தேச நேசன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

தேசநேசன்... ஒரு தமிழ் தினசரியாகும் 1927ஆம் ஆண்டு வெளிவந்தது. கொழும்பில் கே. நடேசய்யர் தொழிற்சங்க தலைவரான ஏ.ஈ.குணசிங்கா முன்னின்று நடாத்திய துறைமுகத் தொழிலாளர் போராட்டத்தில் முன்னணித் தளபதியாக நின்றார். அத்துடன் தொழிலாளர் யூனியன் துணைத் தலைவராகவும் விளங்கினார்,

1921 ஆம் ஆண்டு பிஜித் தீவிலிருந்து நாடு கடத்தப்பட்ட வழக்கிஞரான டாக்கடர் மணிலால் இலங்கைக்கு வந்தார். இவர் ஒரு குஜராத்தியர். தேசப்பற்று மிகுந்தவர். கம்யூனிச கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர். மானிட நேயமிக்க தீவிரவாதி.

டாக்டர் மணிலால் நடேசய்யரை சந்தித்தார். இந்தியத் தொழிலாளர் தோட்டங்களில் படும் இன்னல்களை இருவரும் நேரில் பார்த்தனர் நடேசய்யர் மணிலாலுக்கு நிலைமையை விளக்கினார்.

இலங்கையில் இன்னல்களுக்கு உள்ளாகும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்காக நடேசய்யர் போராடும்படி டாக்கடர் மணிலால் உற்காமூட்டினார். இருவருமே இணைந்து செயல்படுவது என திட்டமிட்டனர். அதனை செயற்படுத்தவும் முனைந்தனர்.

இலங்கையில் பிரிட்டிஷ் வெள்ளைத் துரைமார் டாக்டர் மணிலாலைக் கண்டு பயந்தனர். அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுவதில் தீவிரமாக இருந்தினர். டாக்டர் மணிலால் இலங்கைலிருந்து நாடு கடத்தப் பட்டார்.

1924ஆம் ஆண்டு இலங்கையில் இந்தியர் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப் பட்டது. இலங்கை சட்ட நிறுவன சபையில் இந்தியப் பிரதிநிதிகள் இருவருக்கும் இடம் ஒதுக்கப்பட்டது.

இந்தியர்களை ஒன்று திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்த நடேசய்யருக்கு இது ஒரு சவாலாக அமைந்தது. தேர்தலில் நடேசய்யரும் போட்டியிட்டார். தனது தேர்தல் பிரசாரத்திற்காக "தேசபக்தன்" என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து நடாத்தினார்,

இந்தத் தேர்தலில் ஆறு பேர் போட்டியிட்டனர். திவான், பகதூர், ஐ.எக்ஸ், பெரைரா, முகம்மது சுல்தான், எஸ்.பி. சார்ள்ஸ், டேவிட், ரஸ்டம் ஜி. கோ.நடேசய்யர் என்ற அறுவர் தேர்தல் களத்தில் குதித்தனர்.

இத்தேர்தலில் நடேசய்யர் வெற்றி பெற்றதால் அது தமக்கு பெரும் ஆபத்தாக முடியும் என்று தோட்டத் துரைமார் முடிவு செய்தனர். அதனால் சார்ள்ஸ் என்பவரை ஆதரித்து அவரை வெற்றி பெறச் செய்வதற்காகப் பணத்தை வாரி இறைத்தனர்.

தேர்தலில் நடேசய்யர் தோற்கடிக்கப் பட்டார். ஆனாலும் 1948 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்துக்கு வந்தார். தனக்கு கிடைத்த வாக்குகளில் 2000 வாக்குகள் தோட்டத் தொழிலாளர்களுடையது என பகிரங்கமாக அறிவித்தார். தேர்தலில் ஐ.எக்ஸ் பெரைரா பெற்ற வாக்குகள் 5741 ஆகும்.

மீண்டும் ஆறுவது மாத காலத்தில் நடேசய்யர் தேர்தலைச் சந்திக்க வேண்டி வந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற இருவரில் ஒருவர் மரணமானார். இடைத்தேர்தலில் நடேசய்யர் போட்டியிட்டு வெற்றி வாகை

சூடினார். சட்ட நிறுவன சபையில் நடேசய்யர் இந்தியத் தமிழர்களின் உரிமைக்காக குரல் எழுப்பினார்.

தேசிய தலைவர்களில் ஒருவராக கருதப்படும் பொன்.இராமநாதன் போன்றவர்கள் இந்திய தமிழர்களை "குடியேற்ற கூலிகள்" எனக் கூறி இவர்களின் உரிமைகளை மறுத்த பொழுது அதற்கு எதிராக நடேசய்யர் உரிமை முழக்கச் செய்தார்.

தேசபக்தன் கோ.நடேசய்யரின் பணி அதிகமாயிற்று, தனது 'தேசபக்தன்' பத்திரிகை பணிகளை கவனிப்பதற்காக தமிழகத்தின் தந்தை ஈவேரா பெரியாரின் குடியரசு பத்திரிகையில் பணியாற்றிய டி.சாரநாதன் என்பவரை வரவழைத்தார். இவர் பிற்காலத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்த தேசிகர் இராமனுஜகத்தின் சகோதரராவார்.

பெண்களும் ஆண்களும் சமமாக அரசியலில் ஈடுபட வேண்டும் என்று விரும்பினார்

1927ஆம் ஆண்டு டொனாமூர் கமிசனிடம் பெண்களின் வாக்குரிமைக்கு எதிராக "எங்கள் பெண்கள் அவர்கள் பாட்டில் இருக்கிறார்கள். பெண்களின் முழு வாழ்க்கையும் அவர்களது கவனமும் வீட்டிலே இருக்க வேண்டும். அதற்குகப்பாலான ஒரு உலகமும் இல்லை. வீட்டு பொறுப்புக்கு அப்பால் அவர்கள் செல்ல இடம் கொடுக்க கூடாது."

இவ்வாறு தேசிய வீரரான பொன். இராமநாதன் சாட்சியமளித்தார். இதற்கு எதிராக டொனமூர் கமிசனிடம் கோ.நடேசய்யர், பெரியார்சுந்தரம் ஆகியோர் பெண்களுக்கு வாக்குரிமையை அளிக்க வேண்டும் என வாதிட்டார்கள்.

பெண்கள் வாக்குரிமை சங்கம் 1928 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தில் கோ.நடேசய்யரின் துணைவியார் மீனாட்சி அம்மையார் நல்லம்மா சத்திய வாகிஸ்வர ஐயர், திருமதி ஆர். தம்பிமுத்து ஆகியோர் இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர்.

இலங்கையின் தொழிற்சங்கத் தந்தை எனக் கூறப்படும் ஏ.ஈ.குணசிங்கவுடன் இணைந்து நடேசய்யர் தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டார்.



தொண்டமான்

தமிழகத்தில் வி.கல்யாண சுந்தர முதலியாரின் தொழிற்சங்க பணிகளைப்பற்றி நன்கு அறிந்திருந்த நடேசய்யர் தொழிற்சங்கப் பணிகளில் அதிக அக்கறை காட்டினார்.

1928ஆம் ஆண்டு குணசிங்கவின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக அவரை விட்டு விலகினார். குணசிங்கவை

எதிர்த்து தேசபக்தன் பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதினார்,

பெருந்தோட்டத் துறையில் உழைக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்கு இழைக் கப்படும் இன்னல்களைக் கண்டு நடேசய்யர் ஆத்திரமடைந்தார்,

தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக செயற்பட வேண்டும் எனத் தீர்மானித்தார் கோ.நடேசய்யர். அந்த மக்களுக்காக போராட வேண்டும் என்றால் கொழும்பிலிருந்து குரல் எழுப்புவதைவிட அவர்கள் வாழும் பிரதேசத்திற்கு செல்ல வேண்டும் என்று தீர்மானித்து ஹட்டன் நகரைத் தலைமைஅலுவலமாக மாற்றிக் கொண்டார்.

கோ.நடேசய்யரின் தொழிற்சங்க பணிகள் அனைத்திற்கும் அவருடன் இணைந்து செயற்பட்டவர் அவரின் துணைவியாரான மீனாட்சி அம்மையாராவர்.

நடேசய்யருடன் தோட்டந்தோட்டமாகச் சென்று பாரதியாரின் பாடல்களையையும் தான் சுயமாக இயற்றிய இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அம்பலப்படுத்தும் பாடல்களையும் மீனாட்சி அம்மையார் பாட அதன் பிறகு நடேசய்யர் தோட்டத் தொழிலாளர்கள் விழிப்புணர்ச்சி பெறும் வண்ணம் உரையாற்றுவார்.

"குடை பிடிக்காதே! செருப்பு போடாதே! வெள்ளை வேட்டி கட்டி வெளியே வராதே பத்திரிகை படிக்காதே" என்று தோட்டத் தொழிலாளர்களை வெள்ளையர்கள் அடக்கி ஒடுக்கி வைத்திருந்தனர்.

ஒடுக்கப்பட்ட அடிமைகளைப் போல வாழ்ந்த இத் தொழிலாளர்களுக்கு ஆதாரமாக நடேசய்யர் முழங்கினார்.

"பாட்டாளி தோழனே பயப்படாதே! தலை நிமிர்ந்து வெளியே வா! இந்த நோட்டிஸைபடி! கள்ளக் கணக்கெழுதும் கங்காணிகளுக்கு இடம் கொடுக்காதே! குட்டிச் சாக்கில் சம்பளத்தை எடுக்கும் மட்டத்தை எட்டி உதை! அரை பெயர் போடுவதை எதிர்த்து நில்! பகல் சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரம் லீவு உண்டு! அதை பயமின்றி கேள்! உன்னை விரட்டும் வீணர்களுக்குப் பயந்து உரிமையை விடாதே!"

ஊமைகளாய் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்களிடையே நடேசய்யர் உரத்து முழங்கினார். அதுவரை அரை அடிமைகளாய் வாய் பேச முடியாத ஊமை ஜனங்களாக வாழ்ந்து வாழ்ந்து கொண்டிருந்த தொழிலாளர்கள் விழிப்படையத் தொடங்கினார்கள். இதனால் தோட்டத்துரை மார்களால் நடேசய்யர் தோட்டங்களுக்கு வருவது தடை செய்யப்பட்டது.

தோட்டத் துரைமார்களின் உத்தரவைக் கண்டு நடேசய்யர் பயந்து பின்வாங்கிவிடவில்லை. தோட்டங்களின் அருகில் உள்ள நகர் புறங்களில் கூட்டம் போட்டார்.

தோட்டங்களுக்கு அருகில் கம்பி முள் வேலிகளுக்கு அருகில் மீனாட்சி அம்மையார் பாடல்களை பாட, அதன் பின் நடேசய்யர் தனது கம்பீரமான குரலில் தொழிலாளர்களுக்கு உணர்ச்சியூட்டும் பிரசங்கங்களை செய்தார்.

தோட்டத் தொழிலாளர்கள் நடேசய்யர் தங்களின் இரட்சகராக வாழ்விக்க வந்த மகானாக கருதினார்கள்.

1931 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இலங்கை இந்திய சம்மேளனம், என்ற அமைப்பை தொழிற்சங்க சட்டப்படி நடேசய்யர் பதிவு செய்தார். தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் அக்கறை

கொண்ட இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியினர் 1940 ஜுன் 22 ஆம் திகதி அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன் என்ற அமைப்பை பதிவு செய்தனர். அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன் 1938 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கியுள் ளது. தோட்டத் தொழிலாளர் மத்தியில் மிகுந்த செல்வாக்கு பெறத் தொடங்கியது. இதன் தலைவராக கட்சியின் தலைவராக டாக்டர் என்.எம்.பெரேராவும் பொதுச் செய லாளராக பி.எம். வேலுசாமியும் நியமிக்கப் பட்டனர். இதன் தலைமைக் காரியாலயம் கண்டியில் அமைந்திருந்தது.

1936இல் நடைபெற்ற அரசாங்க சபை தேர்தலில் நடேசய்யர் போட்டியிட்டு மகத்தான வெற்றயைப் பெற்றார். கோ.நடேசய்யருக்கு எதிராக தோட்டத்துரைமார்களாலும் பெரிய கங்காணிமார்களாலும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்க ஆதரவாளர்களும் தோட்டத் துரைமார்களும் அவர்களின் கையாட்களான கங்காணிமார்களும் செயற்பட்டனர். கோ.நடேசய்யர் தொழிலாளர்களின் பலத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றார். இலங்கையின் பாராளுமன்ற வளர்ச்சி பல வேறு வெவ்வேறு கட்டங்களை கொண்டது. 1833 - 1931 வரைக்குட்பட்ட 98 ஆண்டுகள் சட்ட நிறுவன சபை என்ற பெயரிலும் 1931 முதல் 1947 வரைக்குட்பட்ட பதினாறு ஆண்டுகள் அரசாங்க சபை என்ற பெயரில் அழைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அல்லது சட்டசபையில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்த மிகச் சிலரில் நடேசய்யரும் குறிப்பிடத்தக்க ஒருவராவார் என்று கோ.நடேசய்யர் பற்றிய ஆய்வாளரான சாரல் நாடன் குறிப்பிடுகின்றார். கோ.நடேசய்யர் ஆறு ஆண்டுகள் சட்ட நிறுவன சபையிலும் அதன் பின்னர் பதினாறு ஆண்டுகள் சட்ட சபையிலும் இந்திய வம்சாவளி தமிழர்களுக்காகவும் உழைக்கும் தொழிலாளர்களுக்காகவும் பிரதிநிதித்துவம் செய்தார். தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக உரைத்து குரல் எழுப்பினார்.

தோட்டத் தொழிலாளர்கள் உழைத்து உழைத்து சாக வேண்டியவராகின்றனர். களுத்துறைப் பகுதியில் தோட்டம் ஒன்றில் "உழைத்து மாய்வதே எங்கள் வேலை. ஏனென்று கேட்க எங்களுக்கு ஏது உரிமை" என்று எழுதியிருக்கும் வரிகளை காணலாம் என முழங்கினார்.

அது மாத்திரமல்ல........

"கடல் கடந்து வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்கள் தொகை 25 இலட்சமாகும். இதில் 90 சதவீதத்தினர் தமிழர்களாவார்கள். இவர்கள் பல பாகங்களிலும் குடியேறினார்கள் அவர்களின் குரல் காட்டில் அழுகின்ற கதறலாக அமைந்திருந்தது. இலங்கை 1817இல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி 12 சத வீதத்தினர் இலங்கையில் பிறந்தவர்கள். 1921 இல் 21 சதவீதமாகவும் 1941 இல் 80 சதவீதமாகவும் இது அதிகரித்துள்ளது. இப்புள்ளி விபரம் உங்களிடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தோட்டப் பிரட்டுக்களம் போய் நின்று இலங்கையில் பிறந்தவர்களை நான் கணக்கெடுத்திருக்கின்றேன் என எடுத்துரைத்தார்.

1940ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டில்லியில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தைகளை அவதானித்தால் அதன் உண்மை புரியும்.

இந்திய மக்களைப் பற்றி நாடளுமன்றத்தில் 1941இல் எதைச் சொன்னரோ அந்த அடிப்படையில் பின்னர் பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

மீண்டும் ஒரு தடவை இந்தியத் தமிழர்களைப் பற்றி பேசும்பொழுது “இரண்டு வருடத்திற்கு முன்னர் இந்தியர் வரவை கட்டுப்படுத்த வேண்டும் என நான் கொண்டு வந்த தீர்மானத்தை தோற்கடித்தீர்கள். இந்தியர்களின் வருகையை தடைசெய்யக் கூடாது என்று வரிந்து கட்டிக் கொண்டு நின்றீர்கள்.

உடல் உழைப்பை தருவதற்கு மட்டும் இந்தியத் தொழிலாளி உங்களுக்கு வேண்டும். இந்தியர்களை இங்கு சமமாக வைப்பது விருப்பமில்லை. அவனை சேவகனாக வைப்பதிலே விருப்பம் இருக்கின்றது. இலட்சக்கணக்கான தொழிலாளர்களை இந்தியா ஏற்றுக் கொள்வது என்று மட்டும் நினைக்கா தீர்கள். இங்கு குடியேறியவர்களைவிட அதிகமான வெளிநாட்டவர் இந்தியாவில் இருக்கிறார்கள் வளம் கொழிக்கும் தஞ்சை வளல் நிலத்தை புறக்கணித்துவிட்டு இங்கு தொழிலாளர்கள் வந்திருப்பது இந்தியாவுக்கு பொருளாதார இழப்பாகும் இவ்வாறு முழங்கிய நடேசய்யர் இலங்கைப் பல்கலைக் கழகம் இயற்கை எழில் சூழ்ந்த மலையகத்தில் அமைய வேண்டும். அது பேராதனையில் அமைய வேண்டும் என தீவிரமாக வாதாடி வெற்றி கண்டார்.

தேசபக்தன் நடேசய்யரின் பேச்சுக்கள் தனித்தன்மை வாய்ந்தவை. ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் வல்லவர். அவரது ஆங்கில உரைகள் அனைவரையும் கவர்ந்து விடும்.

சட்டசபையில் அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க நடேசய்யரின் விவாதத் திறமைக்கும் அரசியல் விவேகத்திற்கும் தீர்க்கதரிசனமான கருத்துக்களுக்கும் மதிப்பளித்தார். இன்றும் இலங்கையில் இந்திய வம்சாவளியினர் அனுபவிக்கும் உரிமைகளுக்கு வித்திட்டவர் தஞ்சாவூரிலிருந்து வருகை தந்த கோ.நடேசய்யர் என்ற உண்மையை சுவடித் திணைக்களத்திலுள்ள பாராளுமன்ற அறிக்கைகள் பறைசாற்றுகின்றன. (தொடரும்....)

கொழுந்து வளர வாழ்த்துக்கள்

அகில இலங்கை ஜெயமங்கள சேவை

பிரவின் இல்லம்

இல. 1-1/2 வூல்பென்டல் லேன், கொழும்பு - 13

உங்களுக்கு எங்கள் சேவை

தொலைபேசி எண்கள்

0112 337100, 114555435

0728 695306, 0777 852974

வேர்ணன் குணசேகர



முல்லோயா போராட்டம்...

தேயிலைத் தோட்டங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்த தேயிலை உற்பத்தியின் முன்னோடிகளான வெள்ளையர்களால் தென்னிந்தியாவிலிருந்து பெரிய கங்காணிமார்களின் மூலமாக கொண்டு வரப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின் வரலாறு ஆண், பெண், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி கடின உழைப்பும் ,கண்ணீர் மரணம் என்ற ரீதியிலேயே இன்று வரை தொடர்கின்றது.

1940 களில் முல்லோயா கோவிந்தன் கண்டி பொலிஸ் சார்ஜண்ட் சுரவீரவால் சுட்டுக்கொல்லப்பட்ட வரை வாழ்நாள் முழுவதையும் நிர்பந்த அடிமைகளாக கழித்த வீரர்களைப் பற்றிய, வீராங்கனைகளைப் பற்றி வரலாறு அறிந்திருக்கவில்லை.

முல்லோயா கோவிந்தனின் மரணம் 100 ஆண்டுகளுக்கு மேலாக கெடுபிடிகளின் காரணமாக சகித்துக்கொண்டிருந்த தொழிலாயர்களை வீறு கொண்டெழச் செய்ததன் மூலம் தோட்டத்தொழில் துறையின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது.

ஊவா மாகாணத்தில் தொழிலாளர்களை அடக்கி ஒடுக்க பொலிஸாரின் உதவியை நாடிய நிர்வாகங்களுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தன.

முல்லோயா தோட்டத்துரை ஸ்பாவின் துப்பாக்கி முனையில் தோட்டத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது தடுத்து தோட்டத்தில் அமைதியை நிலை நாட்ட திட்டமிட்டார். கோவிந்தன் மரணத்

தின் உண்மையான பின்னணி இதுவேயாகும். கார்களிலும் ஜீப்களிலும் தோட்டத்துக்கு சென்ற பொலிசாரை லய முற்றங்களில் கூடிய தொழிலாளர்கள் பார்ப்பதும் சில வேளைகளில் அவர்களை நோக்கி கூக்குரல் இடுவதும் வழக்கமாயிருந்தன.

லங்கா சமசமாஜக் கட்சியின் நிறமான சிவப்பு நிற சட்டையணிந்த கோவிந்தன் லயத்திலிருந்து பாதையை கடந்தபோது நூற்றுக்கணக்கான தொழிலாளர் முன்னிலையில் சார்ஜண்ட் சுரவீரவால் சுட்டுக் கொள்ளப்பட்டார்.

சம்பவத்துக்கான தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்க விசாரணை ஆணைக் குழுவின் முன் பெருமுயற்சி செய்த பொலிஸாரினால் தமது கூற்றுக்களை நிரூபிக்க ஒரு தொழிலாளியின் ஆதரவைத்தாயினும் பெற முடியாது போய்விட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் சிவப்பு சட்டை அணிந்திருந்த கோவிந்தனை இலங்கை சமசமாஜக்கட்சித் தலைவர் வேலு சாமி என நினைத்தே சார்ஜண்ட் சுரவீர துப்பாக்கியால் சுட்டார் என்பது தெளிவாகியது.

கொலைக்குற்றத்துக்கு தண்டனை மரணம் என்பது எமது நாட்டுச்சட்டம். ஆணைக் குழு தமது அறிக்கையில் துப்பாக்கிச்சூடு சட்டவிரோதமானது. என குறிப்பிட்டது. ஆனால் சார்ஜண்ட் சுரவீரவுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இன்றைய நிலையில் என்றால் கோவிந்தனின் விதவைக்கு போதிய நட்ட ஈடாவது வழங்கப்பட்டிருக்கும். ஆனால் பிரித்தானிய அரசுஅவ்வாறு செய்யவில்லை.

பெருந்தோட்டத் தொழிற்றுறையில் முதலாளி தொழிலாளி உறவு நூல் இழையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில்தான் முல்லோயா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

1920 பிறபகுதியில் தென்னிந்திய பிராமணரான கோ.நடேசய்யரால் நிறுவப்பட்ட சிறுசிறு குழுக்களே பிற்காலத்தின் தோட்ட நிர்வாகத்தினதும் கங்காணிகளினதும் கெடுபிடிகளுக்கெதிரான கூட்டு நடவடிக்கைகளுக்கான தொழிற்ச்சங்க அமைப்புக்கு கருவூலமாக விலங்கின.

நடேசய்யருடன் தொடர்புக்கொண்ட தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர் தோட்டங்களுக்குள்ளேயோ வெளியிலோ கூட்டம் நடத்த மைதானத்தையோ கட்டிடத்தையோ பெற்றுக்கொள்ளமுடியாதவாறு தோட்ட நிர்வாகத்தினரும் நகர முதலாளிமார்களும் நடேசய்யருக்கு விரோதமாக செயல்பட்டனர். எந்த நேரத்திலும் அவருக்கு உயிராபத்து ஏற்படக்கூடிய நிலையை உணர்ந்த வெள்ளையர் அரசு கைத்துப்பாக்கி வைத்திருக்க நடேசய்யருக்குஅனுமதி வழங்கியது.

நடேசய்யர் தங்கிய சுற்றுப்புறத் தோட்டங்களில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அரிசியை நிறுத்தியது. அட்டனை தலைமையமாகக் கொண்டு இயங்கிய நடேசய்யர் 1936 பொதுத்தேர்தலில் அன்று இந்திய தோட்டத்தொழிலாளர்களின் சட்டசபை பிரதிநிதியாகவும் தொழில் அமைச்சராகவும் இருந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் திரு.எஸ்.பெரியசுதந்திரத்துடன் போட்டியிட்டார்.

வருடக்கணக்காக தலையைக் கங்காணி முறைக்கும் குறிப்பிட்ட ஒரு தோட்டத்துக்கு தொழிலாளியை பரம்பரை அடிமையாக்கும் துண்டு முறைக்கும் எதிராக போராடி நடேசய்யரின் எளிமையான தேர்தல் சுலோகம் குறைந்த பட்ச சம்பளத்தை

மேலும் குறைக்கும் மனிதரை தூக்கியெறி என்றவாறு அமைந்தது. (உலகப் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சிக்கு ஈடுக்கொடுக்குமுகமாக தொழில் அமைச்சர் என்ற முறையில் திரு. பெரிய சுந்தரம் தேயிலைப் பயிர் செய்கைத் துறையின் நலன் கருதி தொழிலாளர் அடிப்படைச் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்ற நிர்பந்தத்துக்கு பணியவேண்டியவரானார்)

ஆனால் ஒருபோதும் தொழிலாளர்களின் அடிப்படைச்சம்பளம் தேயிலை விலைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவில்லை.ஒவ்வொரு தொழிலாயும் ஆண் பெண், சிறுவர் என்ற வித்தியாசமின்றி ஒவ்வொரு மாதமும் 26லிருந்து 20 நாட்கள் கட்டாயமாக வேலை செய்யவேண்டும்.

தகப்பன், தாய் ,வயதுவந்த பிள்ளை, குழந்தை என்ற நால்வரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு தேவையான அரிசி, உப்பு, சீனி, பலசரக்கு, மண்ணெண்ணை ஆகிவற்றின் மொத்த விலை 16 நாட்களாகல் பிரிக்கப்பட்டு வரும் பின்னர் ஆண், பெண், சிறுவர் என்ற அடிப்படையில் பிரித்தானிய சிவில் அதிகாரியொருவரால் தரப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த நாட் சம்பளத்தைப் பெற ஒரு தொழிலாளி கட்டாயமாக வேலை செய்ய வேண்டும். இதுதான் ஆகக் குறைந்த நாட்சம்பளத்தை பெற அன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு இருந்த மனிதாபிமானமற்ற தகுதி.

தன்னுடைய குடும்பத்தில் சாவு சடங்கு, பெருநாள் நன்னாள் மற்றும் நோய் நொடிகளுக்கு விமேசனம் பெற, தலைமைக் கங்காணியிடமிருந்து வட்டிக்கு கடன் வாங்கித்தான் ஆக வேண்டும். என்ற பரிதாப நிலையில்தான் தோட்ட தொழிலாளி இருந்தான்.

நாளாந்த குறைந்த பட்ச (போஷாக்கற்ற) உணவுத்தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட நாட் சம்பளம் சிறுசிறு மாற்றங்களை பெற்று நீடித்தது. பொதுத் தேர்தலின் பின் சட்டசபையிலும் வெளியிலும் நடேசய்யருடன் கூட்டுச்சேர்ந்த இலங்கை சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கம் அமைக்கும் பணி துரைமார் அரசு என்று பின்னால் வர்ணிக்கப்பட்ட அரசின் கெடுபிடிகளுக்கு இலக்கானது.

நடேசய்யர் தனிநபர் கோரிக்கைகளுக்கு தொழிலாளர் விவசாயி ஆட்சி அமைவுக்கு முதற்படியாக வெள்ளயராட்சி தூக்கி எறியப்பட வேண்டும். என்ற இலங்கை சமசமாஜக் கட்சியின் கோரிக்கையையும் ஒன்று சேர்ந்த நிலையில் தொழிலாளர்கள் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைமையில் வெளிப்படையாக நம்பிக்கை கொண்டனர். அடக்கப்பட முடியாத அளவுக்கு பலம் பெற்ற இ.ச.ச.கட்சியின் விரலசைவுகளுக்காக தொழிலாளர்கள் காத்திருந்தனர்.

அத்தகைய உத்வேகத்தை பெற்றிருந்த நிலையிலும் சமசமாஜக்கட்சி போதிய தமிழறிவை பயிற்சியைப் பெற்ற ஊழியர்களைக் கொண்டிருக்கவில்லை. எனினும் இலங்கையில் சோஷலிஸத்தை கட்டியெழுப்பும் போராட்டத்தின் முக்கிய தொழிலாளி வர்க்க சித்தாந்த ரீதியாக இ.ச.ச.கட்சி நம்பியமை ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும். இ.ச.ச.கட்சி ஸ்தாபகர் பிலிப் குணவர்தன தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் புரட்சிக்கு இன்றியமையாத தலைமைத்துவத்தை வழங்கும். என்பதில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார். இந்நிலையில்

இடம்பெற்ற முல்லோயா துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஊவா பகுதி தோட்டத் தொழிலாளர்களை வெகுண்டெழச் செய்தது. இ.ச.ச கட்சியின் தலைமையின் கீழ்த்தோட்ட தொழிலாளர்கள் நடத்திய தொடர்ந்த போராட்டங்களின் முன் அரசின் ராணுவ, ஆயுத பலம் செயழிலந்து போயின.

இந்நிலையில் இ.ச.ச. கட்சியை சட்ட விரோத இயக்கமாக்க பிரகடனப்படுத்திய அரசு அக்கட்சியின் இல்லது அங்கத்தினரின் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனம் செய்ததது.கட்சியின் முக்கிய தலைவர்கள் நால்வரைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்தது. திறமையற்ற வழிநடத்தல் கட்சியின் இரகசிய இயக்கங்களையும் செயலிழக்க செய்தது. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் திட்டமற்ற முறையில் தொடர்ந்தது.

அதி தீவிர இயக்கத்தின் முதுகெழும்பை முறித்த இந்நிலையிலும் கைத்தொழில் துறையில் முதலாளி தொழிலாளி உறவின் அவசியத்தை உணர நிர்பந்திக்கப்பட்ட அரசு 1942 ல் நிர்வாக ஸ்தாபங்களையும் தொழிற்சாலைகளையும் அடங்கிய பேச்சு வார்த்தைகளை நடத்தியது. இப்பேச்சு வார்த்தை தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமை அங்கீகாரம், தொழிற்சங்க பிணக்கு மீது பேச்சுவார்த்தை, சமாதான தீர்வு - மத்தியஸ்தம் ஆகியவற்றுக்கு வழி செய்து பிரசித்தி பெற்ற ஏழு அம்ச ஒப்பந்தத்தை உருவாக்கியது. இவ்வொப்பந்ததில் இ.ச.ச கட்சியின் சார்பில் நானும் நடேசய்யரும். இலங்கை இந்திய காங்கிஸ் சார்பில் ஜி .எஸ் மேத்தாவும் கையெழுத்திட்டோம். (அன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருக்க வில்லை . அது தோன்றியதே 1953ல் தான்)

பலநாள் விவாதத்தின் பலனாக பிறந்த 7 அம்ச ஒப்பந்தத்தின் இன்றைய தொழிலாளர் கைத்தொழில், சேமநல சட்டங்களின் முன்னோடி. (இலங்கை சமசமாஜக்கட்சியின் ஸ்தா பக செயலாளரும் சட்டத்தரணியுமான வேர் ணன் குணுசேகராவால் 1985ம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரை)

ஓவியருக்கு கௌரவம்

இலக்கிய முற்றம் வெளியீடான கலைஞர் கலைச்செல்வன் தொகுத்த “புரவலர் சில பதிவுகள்” நூலின் வெளியீட்டு விழா கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற பொழுது ஓவியர் எஸ்.டி சாமி பொன்னாடைப் போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். படத்தில் தினக்குரல் நிறுவனர் திரு.எஸ்.பி.சாமி ஓவியர் எஸ்.டி.சாமி புரவலர் ஹாசிம் உமர், பிரதியமைச்சர் மாண்புமிகு வி.புத்திரசிகாமணி ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். - படம்:சஞ்சிவ்

■ நூரளை சண்முகநாதன்

நம்ம பெரிசாமி - அது தான் தொங்க காம்பரா செவனாண்டி ஊட்டு மகே...... அவே டவுனுக்கு பெரிய படிப்பு படிக்க போனாயில்ல அந்த படிப்புல அவே.... தேறிட்டானா.... இப்பதா கடதாசி வந்திருக்கு அன்று காலையிலே அந்த தோட்ட்ம் முழுவதும் இதே கதைதான்.

பெரியசாமி பீ.ஏ. ஆகிவிட்டான்

எப்படியும்...... செவனாண்டி கொடுத்து வெச்சவேதா...... மகே பீ.ஏ.பாஸா கீட்டானா சும்மாவா .... நம்ம ஊட்டுலையினு........... ஒன்னு இருக்கே........... பொறுக்க தின்னு புட்டு ரஸ்தியாதி அடிச்சிகிட்டு.............

நம்ம தோட்டத்துக்கே இது ஒரு பெருமை பின்னே இருக்காதா என்ன? ஐஞ்சி ஆறு கிளாசோட படிப்புக்கு தோப்புக் கரணம் போட்டுக்கிட்டு மலையில பேரு பதியிறதுலையே நம்ம பயலுகட காலோ பொகுது. இப்பிடி கொஞ்சபேரு படிச்சா தாம்பா நம்ம சனங்களும் உருப்படு இப்ப பாரு ஒரு கூப்பன் புஸ்தோ போம் நிரப்ப தந்தி ஒன்னு எழுத இங்கிலீசுல காயுதம்

எழுத எத்தனை பேருக்கிட்ட பல்ல காமிக்க வேண்டியிருக்கு...

அன்ற 'மாஸ்டரில்' கூட இப்படி பெரிய சாமி பீ.ஏ ஆகிவிட்ட கதையும் அந்த தாக்கம் அந்தச் சமூக உயர்வுக்கு எங்கனம் பயன் படப் பாகின்றது என்பதை பற்றியுமே எல்லோரின் பேச்சுக்களும் உரைத்துக் கொண்டிருந்தன

அன்று சிவணாண்டியின் குடும்பமும் தோட்டமும் எத்தகைய மகிழ்வை அடைந்து கொண்டிருக்கின்றதோ அதற்கு மூல காரணம் என்ற சொன்னால் அது கண்டாக்கையா முருகையாதான் அவர் மட்டும் இல்லாதிருந்தால் மற்றைய்த் தோட்டத்துச் சனங்களைப் போல தோட்ட ஸ்கூலோட தன் எழுத்தறிவுக்கு 'தலையெழுத்து' என்று முழுக்னுப் போட்டு விட்டு மம்மட்டியோ அல்லது மருந்து பம்பையோ தூக்கிக் கொண்டு மலைக்குப் போய் தொங்கல் காம்பரா பெரியசாமியாகத்தான் அவனும் போய் இருப்பான் எல்லாமே அவர் முயற்சி தான் வேலை நேரத்தின் போது அந்த ஏழை ஜனங்களிடம் எத்தனை கண்டிப்போடும் கடுகடுப்போடும் அவர் நடந்து கொள்வாரோ அந்த அளவு மதிப்பும் வஞ்சையும் அந்தச் சனங்கள் மேல் அவருக்குண்டு அவரைப் பொறுத்தவரை அவர்களுக்காக - அவர்களின் வாழ்வுத் தரத்தை உயர்த்துவதற்காக - தனிப்பட்ட முறையில் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லையாயினும் அச்சமூக உயர்வுக்காக ஏதாவது ஒரு சிறு தாக்கமாவது ஏற்படுத்த வேண்டும் என்கிற துடிப்பு அவர் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்திருந்தது.

"ஏய் நீ பழனி ஊட்டு மகே... இல்ல... இங்கே என்னும் 'புள்ளையாரு' அடிச்சிகிட்டு இருக்கிறயா அடி நல்லா அடி இப்படியே அடிச்சிகிட்டிருந்தா நீயூ ஒங்க அப்பனாட்டோ மலையில மருந்தடிக்க வேண்டியதுதா போயி லாம்புவெச்சிவுட்டு பொஸ்தகத்த எடுத்துப்படி..... அப்பதா நீயூ தொரமாதிரி சூட்டு கோட்டு எல்லா போடலா....." எனத் தோட்டத்துப் பையன்களைக் காணும் போதெல்லாம் ஏதாவது நையாண்டி யாகச் சொல்லி அவர்களை எப்போதும் தட்டி விட்டுக் கொண்டே இருப்பார். இந்த நிலையில் சிவனாண்டியின் மகன் பெரியசாமியின் மேல் அவரின் பார்வை விழுந்து விட்டது. அதற்கேற்றால் போல் அவனது மூளையும் அமைற்து விட்டது.

படிச்சி நம்ம என்னத்ததா காண போறோ சாமி..... இத்தோட தோட்டத்தில பேருபதிஞ்சிட்டா அவனு ஏதாவது சம்பா திச்சா எனக்கு எவ்வளவோ செரமோ கொரஞ்ச மாதிரி இருக்கு சாமி.

ஒரு நாள் முருகையாவோடு பேசும் போது தோட்ட ஸ்கூல் "எட்மாஸ்டரும்"

இங்கே பாருங்க பெரிய சாமி படிப்புல எண்டா நல்ல ஆர்வமுள்ளவனாக இருக்கிறான். நான் கூட்டிக் கழிச்சி பெருக்கியும் போடுறான் பாருங்கோ...... அவனுக்கிருக்கிற ஆர்வத்திக்கி கடைசி ஒரு ஆசிரியராக ஆவது அவன் வரணும் தோட்ட ஸ்கூலோடேயே அவனது படிப்பு முடிஞ்சி, மலைக்கு மம்மட்டி பிடிக்க போயிடுவானோ யார் கண்டது.......

"யார் கண்டது" என்ற கேள்வியோடயே மாஸ்டர் முருகையாவிடம் இருந்து கழன்று விட்டார். இத்தோடு அவரது பிரச்சனையும் சரி இதேபோல் எவ்வளவோ நல்ல ஆர்வமுள்ள மூளைகளெல்லாம் தோட்டத்தின் கான் வழிப்பதும், மலையில் மருந்தடிப்பதும் மாஸ்டக்குப் பரிச்சயமாய்ப் போய் விட்ட ஓர் விசயமும் கூட இதைவிட அவரால் எதைத் தான் கணித்துவிட முடியப்போகிறது. தோட்டம் கொடுக்கும் சம்பளத்தில் குடும்பத்தை ஒட்டுவதே பிரச்சனையாக இருக்கிறபோது இல்லாம பிரச்சனைகளையும் மாஸ்டர் தலையில் தூக்கிப் போட்டுக்கொள்ள விரும்பவில்லை.

மாஸ்டரின் இந்தப் பேச்சும் பெரிய சாமியின் ஆர்வமும் நல்ல தன்மைகளும் இதை எப்படியாவது செயற்படுத்தியே ஆக வேண்டும் என்ற மன உறுதியைத்தான் அவருள் வளர்ந்து வந்தது. அவர் செயலாக்க முனையப்போகிற செயலை தனித்து நின்று சசாதிக்கத் தைரியம் அவருக்கில்லைத்தான் ஏனென்றால் அவரே தோட்டத்தில் கையேந்தி நிற்கும் ஒரு லேபர் தானே? டவுன்புற முதலாளிகள் தெரிந்த சிலரைக் கண்டு பேசியதோடு இதற்கான அத்திவாரத்தையும் வளர்த்து வந்தார் முருகையா.

படிச்சி நம்ம என்னத்ததா காண போறோ சாமி..... இத்தோட தோட்டத்தில பேருபதிஞ்சிட்டா அவனு ஏதாவது சம்பா திச்சா எனக்கு எவ்வளவோ செரமோ கொரஞ்ச மாதிரி இருக்கு சாமி.

என முருகையாவிடம் பெரியசாமியின் அப்பன் சொல்லும் போதெல்லாம் அவனுக்குப் புத்தி கூறி பெரியசாமியின் படிப்புக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது கவனித்துக் கொண்டார். தோட்டத்திலிருந்து பஸ் ஏறி டவுன் சென்று கல்லூரியில் படிக்க தொடங்கி விட்டான் பெரியசாமி. எப்படியோ அரசாங்கப் பரீட்சையில் முதல் தரத்தில் பாசாகிவிட்டான் பெரியசாமி.

ஆனால் அதற்குப்பின் அவனை படிக்கவைப்பதென்றால் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியாக வேண்டும். ஆனால் அதற்குரிய வசதிகள் பணபலம் எல்லாம் முருகையா முன் மலையாக நின்றன. இதை எப்படியும் சமாளித்தாக வேண்டும்.

அன்று தோட்டத்து ஸ்கூலில் இதற்கென்று தோட்டச் சனங்களையெல்லாம் கூட்டி ஒரு கூட்டமே கூட்டியிருந்தார் முருகையா.

"இது மஸ்டரில்ல அத நாள நா ஏசுவன்னோ........ கடுகடுப்பாக இருப்பன்னோ யாரு நெனைக்கபடாது. நம்ம தோட்டத்த நெனைச்சு பாருங்க அது அன்னையவிட இன்னைக்கு எவ்வளவோ உயர்ந்திருக்கு அது வாஸ்துவோ தா..... ஆனா அந்த உயர்வுக்கு காரணமா இருக்கிற நாம நம்மலோடை குடும்பம் அன்னைக்கிருந்தலயோ கம்பளி ஸ்கூல் இப்படியே நம்ம வாழ்க்க ஓடிக்கிட்டிருக்கும். நாம வாழ்ந்து

மலையக சிறுகதைகள் நூலுருவில் வெளிவராத காரணத்தால் இன்றைய தலைமுறையினரின் பார்வையிலிருந்து படைப்புக்கள் தப்பிவிடுகின்றன. மலையகத்தின் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நூராளை சண்முகநாதன் எழுபதுகளில் நல்ல சிறுகதைகளைத் தந்தவர். இதுவரை 50 சிறுகதைகள் வரை எழுதியவர் இன்றும் அறியப்படாதவராகவே இருக்கிறார். இவரது சிறுகதைகள் மலையக மக்களின் பிரச்சனைகளையும், அவல வாழ்வையும் அடிநாதமாகக் கொண்டது.

ஏதோ முடியப்போற ஒண்ணு ஆனா நம்ம பின்னால இருக்கிற நம்ம இளசுகள் அதுகளையும் நாம போன பாதையிலே யே இட்டுக்கிட்டு போயி அதுகளையும் மலை மம்மட்டி, மருந்தடிப்பு, கொழுந்தெடுப்பு, ஒரு சாராருக்கு அடிமையாக இருந்தது அவங்களு அவல வாழ்வதா வாழணுமா? அதுகளையும் நம்ம வழியிலேயே விட்டு ஏதோ சரிதான்னு இருந்திடுறதா...........? எல்லா கொஞ்சோ யோசிக்கணு . இப்ப இங்க நாம கூடியிருக்கிற காரணமே குப்பிலாம்பு வெளிச்சத்தில் படிச்சிகிட்டு இருக்கிற நம்ம சமூகத்து இளைய தலைமுறைகல்ல சிலதுகளையாவது நாம உயர்ந்த படிப்பு படிக்க வைக்க முயலனும். சிவணாண்டி போல ஏழை தொழிலாளிகளாளையோ அல்லது உங்களாலேயோ என்னாலேயோ தனித்து இதை சாதிக்க முடியாது. ஏனுன்னா நாம எல்ல ஒண்ணுசேர்ந்து இதுக்கு நடவடிக்கை எடுக்கணும் அதுக்குமொதல் படியா நம்ம செவணாண்டி மகே பெரியசாமிய யூனிவசிட்டிக்கு அனுப்பி படிக்க வைக்கனும். அதற்கு நாம எல்லா நம்மால முடிஞ்சத செய்யறது. இது தனிப்பட்ட ஒருத்தனுக்கு செய்யற உதவியா யாரும் நெனைக்கப் படாது. இது நம வருங்கால தலைமுறைக்கு நம்ம சமூகத்திற்கு அதன் உயர்வுக்கு செயற்ப்படுகிற உதவியாக இருக்கனும் எத்தனையோ பெரியசாமிகள் இந்த தோட்ட சமூதாயத்தில் இருந்து போயி டாக்டரா, இன்ஜினியரா வரணும் அப்பதா நமக்கு நம்ம சமூகத்திற்கு விடிவு பிறக்கும்.

முருகையாவின் பிரசங்கத்தைக் கேட்ட தோட்ட மக்கள் எல்லோரும் ஏதோ தம்மால் இயன்ற உதவியை செய்யத்தவறவில்லை அது செவணாண்டியின் -மகனுக்காகச் செய்தர்களா அல்லது நாளைய சமூதாய விடிவிற்காகச் செய்தார்களா அல்லது காண்டாக்கையா முருகையாவிற்காகச் செய்தார்களா இது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

ஒரு மாதிரி பெரியசாமி பல்கலைக்கழகத்திற்கு பட்டப் படிப்பிற்காத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டான். சில பெரிய கைகளின் உதவிகளோடுதான் நினைத்த காரியத்தைச் சாதித்துவிட்டார் முருகையா. அன்று தோட்டத்தை விட்டு புறப்படுகையில் பெரியசாமி தன்னை வழியனுப்ப வந்திருந்த தன் தோட்ட சாகாக்களைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு பேசிய பேச்சுக்கள் அந்த மலைகளை முட்டி எதிரொலித்தது.

ஏதோ பெரியாருக்கு பிறந்து
வளர்ந்த லயத்துக்குச் சென்றான்.
ஆனால் அதிக நேரம் அவனால்
அந்த பழகிய சூழ்நிலை யில்
இருக்க முடியவில்லை மலத்தை
மிதித்து விட்டவனின் நிலை.

நான் இன்றைக்கு இத்தோட்டத்தை விட்டு நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளியேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு போகிறேன். இந்த தோட்டம் நான் குடும்பமாக வாழ்ந்த தோட்ட ஜனங்களும் எனக்காக என் படிப்பிற்காக செய்த உதவிகளுக்கெல்லாம் மட்டும் தான் இன்று விடை பெறுகிறேன் நாளை அது நமது சமூகத்தின் கதிரவனாக வேண்டும் நல்ல கல்வியறிவு அவ்வறிவால் ஜனிக்கப்போகிற கலாச்சார மறுமலர்ச்சி அம் அலர்ச்சியில் இந்தத் தோட்டத்தில் புதுப் புது அறிவு மலர்கள் மலர வேண்டும் அம்மலர்களை மலர்விக்கும் உதிரமாக என் பிற்கால வாழ்வு இருக்கும். இது தான் உங்களுக்கு என் உயர்வுக்கு பாடுபடும் பெரியவர் முருகையாவிற்கு இச் சமூகத்திற்கு நான் செய்யக் கூடிய நன்றிக் கடன் இன்று இங்கிருந்து ஒரு பெரியசாமி தான் போகிறான். போகமுடிந்தது. இனி மேல் கூட்டம் கூட்டமாய் அம்மாசி மகனும், மரியாயி மகனும் பட்டம் வாங்க போகவேண்டும் அதற்கு இந்தப் பெரியசாமி என்றைக்குமே முதல் ஆளாக நின்று உதவுவான் என்று கூப்பிய கரத்தோடு தோட்ட மக்களின் மகிழ்ச்சியோடும் கரகோஷத்துடன் அவனை வழியனுப்பினர் முருகையா இக்காட்சியை கண்டு பூரித்து நின்றார்.

காலங்கள் தோட்டத்தை பொறுத்த வரை கவ்வாத்துக்களாக ஓடி மறைகின்றன இன்று பெரியசாமி பீ.ஏ.ஆகிட்டான்

பெரியசாமி வந்தவுடன் என் வீட்டில் விருந்து என் வீட்டில் விருந்து என்று பெரிய கிளாக் முதல் சின்னக்காங்காணி வரை நான் முந்தி நீ முந்தி என போட்டி போட்டுக் கொண்டு நின்றனர் எல்லாம் சுயநலம் தான் ஒரு பீ.ஏ. தம் மருமகனாக மாட்டான என்கிற நப்பாசைதான் அடேயப்ப நம்ம செயணாண்டி மகனுக்கு அடிச்சதுதா “சுக்கிர தெசங்கிறது” நேத்து பய மூக்கொழுவிகிட்டு திரிஞ்சவே.... அவனுக்கு வந்த மதிப்பு பெரிய கிளாக்கருல இருந்து கங்காணி அய்யாமட்டு அவனுக்காக இல்ல காத்திருக்காக..... ஏதோ நம்மளோட ஒன்னா பொலங்கிகிட்டு கெடத்தவே தா.......... ஆனா இப்ப அப்படி ஏழுமா

இப்படி பல பேச்சுக்கள் பெரியசாமியை பற்றியே சுற்றி வந்தது. பெரியசாமி பி.ஏ. பட்டதாரியாக தோட்டத்திற்கு வந்து விட்டான். அவன் பீ.ஏ. மட்டும் ஆகப்படவில்லை ஆளே மாறிப்போயிருந்தான்.

இறுகப் பிடித்த கால்சட்டை பட்டிக் சேட் காதளவு நீண்ட சைட்பேண்ட்கையில் ஜேம்ஸ் பொண்ட் வேக் .... வேட்டியோடு கண்டவர்களெல்லாம் வாயிலே கையை வைத்திருந்தார்கள் டேய் மச்சான் என தோல்மேல் கை போட்டுப் பழகியவர்களிடம் எல்லாம் எதையோ காணக் கூட்ததை கண்டு விட்ட மாதிரி ஒதுங்கி நடந்தான்.

ஏதோ பெரியாருக்கு பிறந்து வளர்ந்த லயத்துக்குச் சென்றான். ஆனால் அதிக நேரம் அவனால் அந்த பழகிய சூழ்நிலையில் இருக்க முடியவில்லை மலத்தை மிதித்து விட்டவனின் நிலை.

அடுத்த அடுத்த நாட்கள் பெரியகளாக்கர் சின்னகிளாக்கர் வீடுகளிலேயே கழிகின்றன. அவர்களோடு அவனால் ஒத்துப் போக முடிகிறது. வந்து ஒரு கிழமையாகி விட்டது. முன்பு யூனிவசிட்டியில் இருக்கும் போதே “டிரை” பண்ணிய ஒரு கிளார்க் ஜொப் கொழும்பில் இப்போது கிடைத்துவிட்டதாக கூறி கொழும்பிற்கு புறப்பட்டு விட்டான் பெரியசாமி.

நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளியைத் தேடிப்போகிறேன்..... என போகுமுன் பேசிவிட்டுப்போன பேச்சுக்கள் மகாவலி கங்கையோட போய்விட்டது போலும்.

முருகையா இப்போது அதிகமாக எவரிடமும் கதைப்பது கிடையாது இப்போது தோட்டப் பையன்கள் 'பிள்ளையார்' எட்புரூஸ் அடிப்பதைப் பார்த்த அடிங்கடா இதுதா ஒங்களுக்கு லாய்க்கு அப்பே மருந்தடிக்கிறா.... அடுத்தா நீங்க அடிங்க...... அப்பனோ ஒங்க மகேமாருங்க அடிப் பாருங்க அடிப்பானுக எல்லா..... ஒங்களோட தலைவிதிடா எப்படியாவது போங்க நமக்கென்ன..... என முருகையா முனங்குவதோடு சரி. ✱✱✱

அண்மையில் இலங்கை வந்து சென்ற ஆதவன் தீட்சண்யா அவர்கள் தமிழ் சிறு கதை உலகின் புதுமைப் பித்தன், ந.பிச்சமூர்த்தி, மௌனி, வ.ரா,தி. ஜானகிராமன், கு.ப.ரா, கு.அழகிரிசாமி, சுந்தரசாம சாமி, ஜெயகாந்தன், வண்ணநிலவன், வண்ணதாசன், தமிழச்செல்வன், கோணங்கி, பூமணி, ப.ஜெயப்பிரகாசம், அழகியபெரிய வன், பெருமாள் முருகன் வரிசையில் ஒரு கம்பீர படைப்பாளியாக கவனங்கொள்ளத் தக்கவர்..

அரிதார வெளி தாண்டி அதிகார வெறிக்கெதிராக ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதை உலகம்...

என் வார்த்தையின் மேல் என் எச்சில் படிந்திருக்கும். என் மூதாதைகளின் உரு வம் பச்சை குத்தப்பட்டிருக்கும். உடைந்த சீசா துண்டைப்போல மூர்க்கர் களின் பாதையில் காத்திருப்ப வற்றை என் வார்த்தைகலென அறியுங்கள் என பிரகடனம் செய்யும் ஆதவன் தீட்சண்யா வின் படைப்புலச் செழுமையை ஓரிரு வரிக்குள் செல்லிவிட முடியாது. அவர் தனது கதைகளூடாக நாங்கள் ஒரு போதுமே சிந்திக்காத பல களங்களை காட்டிநிற்கின்றார்.

சு.முரளிதரன்

சமகால சிறுததை உலகம் வரலாற்றின் மீது வினாத் தொடுத்தல், அங்கிருக்கும் மௌனங்களை உலுக்குதல் பின் உலுக் கும் அதிர்வுகளால் விளைந்ததை கொண்டு வரலாற்றை புதியதாக புனைதல் என்பதாக அமைந்துள்ளதெனக் கூறுவார்கள். இதை நன்கு உள்வாங்கியுள்ள ஆதவன் தீட் சண்யா வரலாற்றை அங்கத மொழியாடல் ஊடாக பரிகசித்து அம்பலப்படுத்தும் வேலையையும் புதிய அசைவுக்கு திசைப் படுத்தும் வேலையையும் கன கச்சிதமாக செய்து விடுகின்ற மையை அவரின் கதை களில் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் அவரது கதைகளில் வியந்து பேசப் படும் “கதையின் தலைப்பு கடைசியில் இருக்கக்கூடும்” என்ற கதை எள்ளல் சுவை யைக் கொண்டுள்ள சிறப் பான தலித்திய கதையாகும். துப்பரவு பணி யாளர்களுக்கு நாட்டின் ஜனாதிபதியை விட அதிக சம்பளம் வழங்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக்கத்தில், துப்பரவு பணி யாளர்கள் நட்சத்திர அந்தஸ்து பெறுகின் றார்கள். அவர்களுக்கு எதிராக அருந்ததி யார் அல்லாதோர் துப்பரவு பணியாளர் களின் ஆதிக்கத்தை தகர்க்க மேற்கொள் ளும் முயற்சிகளை சாதியத்தின் கொடுமுடி களை பல்பரிமாணங்களில் தொட்டு கதையை நகர்த்தியிருக்கின்றார். இக் கதையின் மற்றொரு சிறப்பு என்னவெனில் எந்த வித பாத்திரங்களும் கதையை நகர்த் திச் செல்லாமல் வர்ணனையாளராக அவரே கதையைச்சொல்லியிருப்பதாகும்.

லிபரல் பாளையத்து கட்டப்பஞ்சகயத் தார்க்கு காவானோபா வழங்கிய தீர்ப்பு எனும் கதை “ஓரக் கழுத்தர் என்றோர் இனமுண்டு - அதற்கு உலகில் தனியே குணமுண்டு” என செல்போன் பாவனை காரணமாக கழுத்தை சாய்த்தே அப்படியே ஆனவர்களை காட்டி ஆரம்பமாகி இன்று செல்போன்கள் எவ்வாறு நமது வாழ்வின் பல நல்ல பக்கங்களை கபளீகரம் செய்வது குறித்து நகைச்சுவையாக சொல்லவந்தா லும் - மனிதர்கள் இயந்திரமாகிக் கொண் டிருக்கும் அவலம், தர்ம நியாயங்களுக்கு சமுகத்தில் காணப்படும் கெடுபிடி மற்றும் சாதிகளின் பெயரால் தீவுகளாகியிருக்கும் மனித இனம் என பலரகப்பட்ட பிரச்சினை களை ஆழமாக தொட்டுப்பார்த்திருப்பது தெரிய வருகின்றது.

அண்மையில் பதிவு செய்யப்பட்ட சிறந்த பெண்ணிய கதையாக செல்லப்பட வேண்டியது ஆதவனின் “கடவுளுக்கு தெரி யாதவர்கள்” ஆகும். பிராமண இள விதவை தன்னைச் சூழவுள்ள தடைகளை விட்டு வெளியேற செய்யும் பிரயத்தனங்களை வித் தியாசமான முறையில் பதிவு செய்துள்ளார். ஒரு பெண் ஆளுமையைக்குறித்து திரைப் பட முயற்சி நடப்பதாக கதை கட்டியெழுப் படுகின்றது. விதவையாக தலை மழித்து ஆண் பார்வைகளுக்கப்பால் சிறை வைக் கப்பட்டிருக்கும் பெண் அதனை விட்டு வெளி யேற தன்னிடம் வரும் தலை மழிக்கும் நாவி தனை கருவியாகக்கொள்கின்றாள். அவ னோடு உறவு கொள்வது மட்டுமன்றி அதனை மற்றவர் அறிந்ததும் நாவிதனின் சவரக் கத்தியை காட்டி அவர்களை பய முறுத்தி அவனை கையில் பிடித்த படி வீட்டை விட்டு வெளியேறி புதையிரமேறி தப்பிச் செல்வதும் பிராமணப் பெண்ணோடு புணர்ந்தது பழி பாவங்களுக்கு கொண்டு சென்று விடுமோ என்ற அச்சத்தில் செல்லும் வழியில் குதித்து தற்கொலை செய்து கொள் வதும் பின் புனா சென்று அங்கு ராணுவத் தினரின் வல்லுறவு எத்தனிப்பிலிருந்து தப்பி விதவைகளுக்கான இல்லத்தை வந்த டைந்து 72 வருடங்கள் தஞ்சம் கொண்ட வாழ்வு பற்றியதாக கதையமை கின்றது.

அந்த பெண் வாழ்க்கை ஜெயித்தவள் என்பதற்காக அவளது கதை படமானாலும் வெளியிடப்படாமலிருப்பதற்கு காரணம் அவளுக்காக உயிர் நீத்த அப்பாவி நாவி தன் குறித்த அப்பெண்ணின் உளைச்சல் குறித்து பார்க்கப்படவில்லை என்பதாகும்.

நாம் எப்போதாவது வைத்தியசாலை யில் பிணம் வெட்டுபவனின் இருக்கை குறித் தும் வாழ்க்கை குறித்தும் சிந்தித்திருப் போமா? பிணம் வெட்டுபவர்களுக்கும் செப் டிக் டேங் அள்ளுபவர்களுக்கும் சாரயம் குடித்தல் என்பது அவசியமானது என நியாயப்படுத்தப்பட்ட சூழலில் அன்னையா எனும் பிணம் வெட்டுபவனின் வாழ்க் கையை அவலச்சுவை சொட்ட சொட்ட செதுக்கிக் காட்டியிருக்கின்றார். பிணத் தோடு வாழ்பவர்களின் மனவடு மத்திர மன்றி அவர்களைச் சார்ந்த குடும்பத்தின ரின் நடத்தைகளையும் எவ்வாறு பாதிப்ப தாக இருக்கின்றது என்பது இதன் சாரம்சம். “அன்னய்யா எழுவதற்கான அறிகுறி களற்று பிணங்களோடு அளவளாவிக் கிடந்தான். மனிதன் எல்லாவகையிலும் திணறிப்போய் தன்னை நிறுத்திக்கொள்கிற அகாலத்தின் பின்தொடர் காலத்தில் அவ னோடு பேசி உறவாடி, தொட்டு விளையாடி அன்னைய்யா தூக்கத்திலும் தன்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றான். பிணங்

களாலே சூழப்பட்டிருந்தாலும் மரணமற்ற வாழ்வின் அருள்பெற்ற ஒற்றை மனிதனாய் அன்னய்யா காலகாலத்துக்கும் இருப்பான் எனத் தோன்றியது." என கதையை முடிக்கும் போது நாம் நேசிக்க வேண்டிய மனிதர்கள் எங்கெல்லாம் சிதறிப் போயிருக்கின்றார்கள் என்பதை சொல்லிக் காட்டுகின்றார். இதைப்போல தையல்காரர்களை குறித்து உரத்து சிந்திக்கும் கதையாக அமைவது "காலத்தை தைப்பவனின் கிழிசல்" எனும் வரலாற்றைத் தோண்டிப் பார்க்கும் கதை. மனோகர் ராவ் என்கின்ற தையல்காரனின் கதையின் பின்னணி தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தை ஒட்டியது. அபபோது வெள்ளைகாரர் படையிலிருந்த தையல்காரர்களின் நிலைமையை இக்கதை படம் பிடிக்கின்றது.

இது வரை இருபத்தொரு கதைகளை படைத்திருக்கும் ஆதவனின் அடுத்த அற்புதம் அவரின் உரைநடை தான். இதுவரை காலமும் சிறுகதைக்குள் கொண்டு வந்திராத கவித்துவ வீச்சோடு தொன்மங்களும் படிமங்களும் கைகோர்த்துக்கொண்டு செல்வது போல எடுத்துரைப்புகளும் வர்ணனைகளும் வாசிக்கத்தொடங்கினால் எந்த சக்தியும் நம்மை அதிலிருந்து பிய்த்தெடுக்க முடியாத படி ஒட்டி வைத்து விடுகின்றது. நாட்டார் வழக்காற்றை சொட்டும் பிசகாது கொட்டி விடும் கிராமிய கதைகளும் உலகமயமாதற் சூழலில் நம்மோடு ஒட்டிக்கொண்ட பொருளியல் அறிவியல் முதலானவற்றின் சொல்லாட்சிகளை கொண்ட நவீன காலத்து கதைகளும் மறக்க முடியாத அனுபவங்களை அள்ளித் தருகின்றன.

தமிழ்ச் சிறுகதைகளின் தலையெழுத்தை மாற்றும் வல்லமை கொண்ட ஆதவனின் வரவு தமிழ் வாசகர்களுக்கு வரப்பிரசாதம். ஆனால் ஆதவனே அதைப்பற்றியெல்லாம் கவலை கொள்ளவில்லை போல் தெரிகின்றது. அவரின் சிறுகதைத் தொகுதியின் தன்னுரைப் பகுதியை "நான் எழுத வந்திருக்காவிட்டால் குடிமுழுகிப் போயிருக்காது..." என்பதாகவே ஆரம்பிக்கின்றார். அது மட்டுமல்ல "படைப்பாளியின் சுதந்திரம் என்ற வலுவான ஆயுதத்தைக் கொண்டு நான் எந்த அதிகாரத்தை எதிர்த்தாவது என் படைப்பு வழியே பேசியிருக்கின்றேனா அல்லது சமகாலத்தின் குரலுக்கும் அழைப்புக்கும் செவிமடுக்காது தப்பியோடுவதைத் தான் படைப்பாளியின் சுதந்திரம் என்று சொல்லி பம்மாத்துப் பண்ணிக் கொண்டிருக்கின்றேனா" என தன்னைத் தானே கேட்டுக் கொள்ளும் தீட்சண்யா இன்னுமொன்றை சொல்வதை கவனமாக நோக்க வேண்டியிருக்கின்றது. என் படைப்புகளால் இந்த சமூகத்தின் அமைதியும் ஒழுங்கும் கெட்டு விட்டது என்று தண்டிக்கப்படுமளவிற்கு ஏன் இன்னும் என்னால் எதுவும் எழுதிவிட முடியவில்லை என்ற கேள்வி என்னை நிம்மதியில்லாதவனாக்கிவிட்டதாக கூறுவதோடு, தன் படைப்பு இன்னும் தடைசெய்யப்படாமலிருப்பதற்கு காரணம் நானும் போலித்தனமான படைப்பு மனத்தோடு தானா இயங்கியிருக்கின்றேனென மனசாட்சியோடு விசாரித்துக் கொள்வது நம்மை சிந்திக்க வைக்கின்றது.

ஆதவனோடு ஒரு நாள் இருந்த போது அரிதாரம் பூசிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமில்லாதவராக வெளிப்பட்டார். ஆனால் பேசும் ஒவ்வொருக் கணமும் அதிகார வெறிக்கெதிரான கருத்துக்களை முன்வைக்கத் தவறியதே இல்லை. இதனைத்தான் ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதை உலகமும் பற்றியிருக்கின்றது.

கலை உலகில் எனது உயர்வுக்காக
துணை நின்ற இனிய நண்பர்
கலைமாமணி V.K.T. பாலன் – திருமதி T. சுசீலா
(தலைவர் / நிர்வாக இயக்குநர், மதுரா நிறுவனங்கள்)
தம்பதிகளின் மகள்
திருவளர் செல்வி சரண்யாவையும்

டாக்டர். பி.பாபுமனோகரன் – திருமதி ஷீலா
(நிர்வாக இயக்குநர், சென்.ஜோசெப் இஞ்சினியரிங் கல்லூரி)
தம்பதிகளின் மகன்
திருவளர் செல்வன் பி.ஜெய்குமார் கிறிஸ்துராஜனையும்

நீடூழி வாழ
நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

ஸ்நேகமுடன் **சீதாராமன்**
**(இலங்கை வானொலி, தொலைக்காட்சி,
மேடை நிகழ்ச்சி அறிவிப்பாளர்)**
தொலைபேசி - 0094 11 2884751
கைபேசி - 0094 777349737
e-mail - rseetha@ymail.com

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின்
5ஆம் மாநாடு

நாள்: 21.02.2010

நடைபெறும் இடம் : திருவிதாங்கூர் அரண்மனை, குற்றாலம்

இம் மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும் இலங்கை சிற்றிதழாளர்கள்
தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

சென்னையில் : சொர்ணபாரதி, செயலாளர் 00967710102, 9444106998
திருச்சியில் : நந்தவனம், சந்திரசேகன் 00960036351l, 944328423
திருவனந்தபுரம் : சொக்கம்பட்டி ரஹீம் 0042287971

பயண நேரம் (புகையிரதத்தில்)

சென்னை - குற்றாலம் : 11 மணித்தியாலம்
திருச்சி - குற்றாலம் : 7 மணித்தியாலம்
(சென்னை அல்லது திருச்சி முதல் செங்கோட்டை வரை - பொதிகை எக்ஸ்பிரஸ்)
இறங்கும் இடம் : தென்காசி
தென்காசி - குற்றாலம் : 20 நிமிடம்
திருவனந்தபுரம் - குற்றாலம் : 4 மணி நேரம்

இலங்கையில் இருந்து கலந்துகொள்ள விரும்பும் சிற்றிதழாளர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
அந்தனி ஜீவா
57, மகிந்த பிளேஸ், கொழும்பு 06.
கைபேசி : 0776612315




e Wish Kolundu all Success!
MADURA
25
மதுரா
1986
Silver Jubilee Year
17-01-2010 to 17-01-2011
2011
24 Hrs 365 Days
All Domestic & International
Air Tickets Available
Across the Counter
madura travel service (p) Ltd.
11-3, Gandhi Irwin Road, Egmore, Chennai - 600 008, Tamilnadu, India
Ph: +91 98416 91234, Fax : +91 44 28191813